# புத்தாண்டில் 21 படுகொலைகள்: சந்தேகநபர்கள்

# எவரும் கைதாகவில்லை!

பக்கங்கள் 8  ★  விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர் 19  சித்திரை 4  ரபி ஆகிர் 26  இதழ்-64
யாழ்ப்பாணம்  சனிக்கிழமை  16-4-77

கொழும்பு, வெள்ளி

புத்தாண்டில் நாடு பூராவும் 21 கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் இன்று அறிவித்தது.

சடுதித்தகராறு, பழைய பகை, மதுபோதையில் ஏற்பட்ட சச்சரவு, நிலத் தகராறு, சூதாட்டம் போன்றவற்றால் இக்கொலைகள் நடந்துள்ளன.

கெப்பிட்டிப்பொலமொகல்லை என்னுமிடத்தில் டி. எஸ். சேமபால என்பவர் ஐந்து நபர்களால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் புதுவருடத்தன்று நடந்தது.

உடுமல்ல என்னுமிடத்தில் குலதுங்க என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கிரிவெரிய என்னுமிடத்தில் வியனதுங்க என்பவர் என். ஜி. சோமவீர மற்றும் மூவரால் கொல்லப்பட்டுள்ளார். சடுதி சண்டை இதற்குக் காரணம்.

மொரட்டுவ கட்டுநாயக்கா என்னுமிடத்தில் ஆர். ஏ. கண்ணுச்சாமி என்பவர் தாக்கப்பட்டு மரணமடைந்துள்ளார். 5 பேர் இதுசம்பந்தமாக தேடப்படுகிறார்கள். பழைய பகைமையே இதற்குக் காரணமாம்.

இங்கிரியா என்னுமிடத்தில் நடைபெற்ற ஒருகொலைச் சம்பவம் தொடர்பாக மூவரை பொலிஸார் தேடுகின்றனர். கால்நடைகளால் எழுந்த சச்சரவு இதற்குக் காரணம்என்று தெரிவிக்கப்பட்டது.

புளத்திட்டிய என்னுமிடத்தில் புதுவருடத் தினத்தன்று திசநாயக்கா புஞ்சிபண்டா என்பவரை ரணசிங்க என்பவர் குத்திக்கொன்றிருக்கிறார்.

மாத்தறையில் புதுவருட தினத்தன்று போகம என்பவரை சார்ல்ஸ் என்பவர் குத்

[7-ம் பக்கம் பார்க்க]

# 'தமிழ்ஈழ' இலட்சியத்துக்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவு?

## மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என்கிறார் மாவை சேனதி

மாவிட்டபுரம், வெள்ளி

''வடபிரதேசக் கம்யூனிஸ்டுகளிடமும், திரு. வி. பொன்னம்பலம் அவர்களிடமும் ஒரு பெரிய மனமாற்றம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். தமிழ் ஈழ இலட்சியத்தை அடைவதில் அவர்கள் ஒத்துழைக்கக்கூடிய சாத்தியங்கள் அதிகரித்து வருகின்றன என்பதை மட்டும் சொல்ல முடியும். அப்படி அவர்கள் தமிழ் ஈழ இலட்சியத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களுக்குத் தமிழ் ஈழ இலட்சியத்தில் பங்குகொண்டு உழைக்கக் கதவுகள் என்றும் திறந்திருக்கும்.''

இவ்வாறு அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவிலடியில் நடைபெற்ற இளைஞர் பேரவைக் கருத்தரங்கில் கலந்துரையாற்றிய மாவை சேனதிராசா கூறினார்.

திரு. வி. சொக்கநாதர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

### வி. பி. சிந்தனையில் புதிய திருப்பம்

''தமிழர்விடுதலைக்கூட்டணி தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திரு. வி. பொன்னம்பலம் 1972ம் ஆண்டுக்குப் பின், தமிழர் பிரச்னை குறித்துத் தமது சிந்தனையில் புதிய திருப்பமேற்பட்டுள்ளதாகக் கூறும்போது, தமிழ் ஈழ இலட்சியத்திலும், அதற்காகத் தமிழர்விடுதலை கூட்டணிநடத்தும் இயக்கத்திலும் உடன்பாடில்லாமல் அவர் எம்முடன் பேசியிருக்க முடியாது என்பதை அறியமுடிகிறது. நமது நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகள் மத்தியில் மட்டுமல்ல, இந்நாட்டு ஆட்சிபீடத்திற்கும், உலக நாடுகளில் குறிப்பாக வல்லரசு நாடுகளிலும்கூடத் தமிழ் ஈழத்தீ பரவத்தொடங்கியுள்ளது.

''தமிழினம் தனித் தேசிய இனமாகையால் இவ்வினத்துக்குத் தன்னைத்தானே ஆளும் சுயநிர்ணய உரிமை உண்டு என்றஅடிப்படையில் இலங்கை முழுவதற்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி பிரதேச சுயாட்சியை அங்கீகரிக்கும்போது தமிழர் வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசம் - தமிழ் ஈழமென்று அமையுமென்றும், தமிழினம் விரும்பினால் பிரிந்துசெல்லும் உரிமையைக் கொண்டிருக்க வேண்டுமென்றும் தாம் கம்யூனிஸ்ட்கட்சியிடம் வற்புறுத்தியிருப்பதாகத் திரு.பொன்னம்பலம் கூறுகிறார். ஆனால் இதை

(7-ம் பக்கம் பார்க்க)

## டயர் கூட்டுத்தாபனத்தில் வேலை நிறுத்தம்!

### டயர்களுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, வெள்ளி

களனி டயர் கூட்டுத்தாபன ஊழியர் வேலைநிறுத்தம்செய்து வருகின்றனர்.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக உள்ளூரில் டயர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

உள்ளூரில் டயர் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் பொருட்டு அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து டயர்களை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## இ.போ.ச. ஊழியர் வேலைக்குத் திரும்பினர்

கொழும்பு, வெள்ளி

மகரகம, ஹோமகம ஆகிய பஸ் டிப்போக்களில் நடைபெற்றுவந்த ஊழியர் வேலை நிறுத்தம் முடிவடைந்துள்ளதாக இ. போ. ச. தலைவர் திரு. ஜே. சி. ரி. கொத்தலாவலை இன்று தெரிவித்தார்.

இன்று இவர்கள் அனைவரும் வேலைக்கு திரும்பியதாகவும் வழமையான பஸ் சேவைகள் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

சாரதி ஒருவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய உதவி

(8-ம் பக்கம் பார்க்க)

கூட்டணி மேதின ஊர்வலத்தில்

## மறைந்த தமிழ்த் தலைவர்களின் உருவப்படங்கள் பவனிவரும்

யாழ்ப்பாணம், சனி

கூட்டணி மேதின ஊர்வலத்தில், மறைந்த தமிழ் தலைவர்களின் உருவப்படங்களை தாங்கிச்செல்ல ஏற்பாடு செய்வதென மேதினஅமைப்பு குழு நேற்று முடிவுசெய்தது.

தமிழர் விடுதலைக்கூட்டணி காரியாலயத்தில், அமைப்புக் குழுத் தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் நேற்று பிற்பகல் கூட்டணி மே தின அமைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

ஊர்வலம் ஆரம்பிக்கும் இடமான மருதனமடத்திலும், கூட்டம் நடைபெறும் இடமான யாழ். முற்றவெளியிலும் கலைநிகழ்ச்சிகள்ஒழுங்கு செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

ஊர்வலம் வரும் வழியில் வீதி அலங்காரத்திற்கு உபகுழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

மேதின கூட்ட முடிவில் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் பஸ்சேவை ஒழுங்கு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க-இ)

## கூட்டணி நடவடிக்கைக் குழு இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், சனி

தேர்தல்விஞ்ஞாபனம் பற்றி ஆராய்ந்து முடிவுசெய்வதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைக் குழு இன்று கூடுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணி தலைமைக்காரியாலயத்தில், இன்று காலை 9-30 மணிக்கு கூடும் இக் கூட்டத்தில் உபகுழுவினால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்படும்.

இன்றைய அரசியல் நிலை பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

## செல்வாவைப்பார்க்க இன்று டாக்டர் கப்ரால் வருகிறார்

### உடல்நிலையில் மாற்றமில்லை!

யாழ்ப்பாணம், சனி

மூதறிஞர் செல்வநாயகத்தைப் பார்வையிடுவதற்காக மூளைநரம்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் ஷெல்டன் கப்ரால் இன்று மீண்டும் கொழும்பிலிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வருகிறார்.

விமானமூலம் வரும் இவருடன் வைத்திய நிபுணர் டாக்டர் டபிள்யூ. எஸ். எல். குணசேகராவும் இங்கு வருகிறார்.

நிபுணர்கள் இருவரும் மூதறிஞருக்குவேண்டிய பல பரிசோதனைகளைஇன்றுமேற்கொள்வார்கள் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

டாக்டர் மண்டலேஸ்வரன் செல்வாவின் உடல் நிலையை ஆஸ்பத்திரியில் இருந்து கவனித்துவருகிறார்.

மூதறிஞர் செல்வநாயகத்திற்கு இன்னும்மயக்கம்தெளியவில்லையென்றும், டாக்டர்கள் தொடர்ந்து சிகிச்சையளித்து வருவதாகவும் யாழ்.பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் திரு. அமரசிங்கம் தெரிவித்தார்.

நேற்றும் நாசித்துவாரத்தினூடாகக் குழாய்மூலம் நீர்ப்பதார்த்தங்கள்கொடுபட்டன. கால கைகளில் மட்டும் சிறிது அசைவு காணப்பட்டபோதிலும் தாமாகவே கைகால்களை விரும்பிய பக்கத்திற்குத் தூக்கி வைக்கக்கூடிய உணர்வு இன்னும் ஏற்படவில்லையென டாக்டர்கள் தெரிவித்தனர்.

கண்இமைகளை இலேசாக அவர் திறக்க முயற்சிசெய்தபோதிலும் எதிரில் உள்ளவர்களைப் பார்க்கக்கூடிய உணர்வு இன்னும் ஏற்படவில்லையாம்.

திருமதி செல்வநாயகம் அங்

(8-ம் பக்கம் பார்க்க)

## தி.மு.க.விலிருந்து இரா செழியன் ராஜினாமா

சென்னை, ஏப். 15

தி. மு. க. வின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் லோக சபை உறுப்பினருமான திரு. இரா செழியன் தி. மு. க, விலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

தாம் ஜனதா கட்சியில் சேரவிரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டையிடும் பருவத்திலுள்ள 'ஹைலயின்' கோழிகள் விற்பனைக்குண்டு. முருகையா, கண்டிவீதி, யாழ்ப்பாணம். போன்: 7115.
5916

16-4-77; 17-4-77ல் ஊர்காவற்றுறை புனித. அந்தோனியார் கல்லூரி களியாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 'மில்க் வைற்' விளம்பர காட்சி சாலையில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த இரும் பொருட்கள் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.
5919

புத்தம்புதிய றலி ஸ்ப்போட் சயிக்கிள் கியர், கப்பிறேக் உள்ளது. தற்சமயம் சிங்கப்பூரிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டது. நேரில் வரவும். டாக்டர் இ. சோமசுந்தரம், 103, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
5917

## தேவை

தமிழ் தட்டச்சு யந்திரம் (புதிய கிபோர்ட்) உடனடியாக தேவை. தொடர்பு கொள்ளவும். எஸ். முத்தையா, 12, நல்லூர் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (தொலைபேசி: 391)
5927

## பயிற்சி

வெளிநாடுகளில் எமது சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வெல்டிங் Electric Arc & Gas (மூன்று மாதம்) இலெக்றிக் வயறிங் (மூன்று மாதம்) ரேடியோ Transistor Technology (ஆறுமாதம்) ஒரே கட்டிடத்தில் Theory & Practicals. ஆங்கிலப் படிப்பு இலவசம். எமது NIET டிப்ளோமா பெற்ற பலர் வெளி நாடுகளில் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
5929

## மின்கம்பி இடுபவர் சகா காரைநகர் வடக்கு கிராமசபை

காரைநகர் வடக்கு கிராம சபைக்கு மின்கம்பி இடுபவர் சகா பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் உரியமுறையில் தயாரிக்கப்பட்டு விசேடஆணையாளர் கிராமசபை காரைநகர் வடக்கு, காரைநகர் என்ற முகவரிக்கு 1977ம் ஆண்டு சித்திரை மாதம் 19ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல்12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் மின்கம்பி இடுபவர் சகா பதவி என தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(2) வயதெல்லை 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் இருக்கவேண்டும்.

(3) கல்வித் தகமைகளும் பிற தகமைகளும்; கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தோற்றியவராயும் கணிதம், எண்கணிதம், தமிழ்ப்பாஷை உட்பட இரண்டுதிறமைச்சித்திகளுடன் ஆறுபாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன்இலங்கைதொழில் நுட்பக்கல்லூரியினால் வழங்கப்பட்ட மின்கம்பி இணைப்பு பற்றிய தராதரப்பத்திரம் பெற்றிருத்தல்வேண்டும். அல்லது இத்துறையில்ஓர் உள்ளூராட்சி மன்றத்தில் குறைந்தது நான்கு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு

காரைநகர் கிராமசபையில் ஏற்கனவே கடமைபுரியும்விண்ணப்பதாரிகளுக்கு மேற்காணும் கல்வித்தகமைகள் பிரயோகிக்கப்படமாட்டாது.

வே. மாரிமுத்து,
விசேட ஆணையாளர்,
காரைநகர் வடக்கு கி.ச.
காரைநகர் வடக்கு
கிராமசபை அலுவலகம்
காரைநகர், 4-04-77
5933


## புதிய தலைவர்

சுழிபுரம், வெள்ளி

...ட்டக் கல்லூரி இந்துமா மன்றத்தின் நடப்பாண்டு புதிய தலைவராக திரு. த. விக்கினராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மூளாயைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபாலதிபர் திரு. இ. தம்பையாவின் புதல்வராவர். (அ)


சீட்டு இல ........

## பொதுத் தேர்தல் 1977

பொதுமக்கள் நியமனச்சீட்டு

தொகுதி............... பெயர் ..........
........................ வயது......... அவர்
களை நியமிக்க விரும்புகிறேன். 25 சத முத்திரை இத்துடன் அனுப்புகிறேன்.
தொழில்..................
விலாசம்.....................
........................... (கையொப்பம்)

அனுப்ப வேண்டிய முகவரி:

காரியஸ்தன்
ஈழத்தமிழ் தொண்டர்சபை
''மகாலிங்கவாசா'' கீரிமலை.
(ADVT)

உ

## மலாயன் கபே வெள்ளி விழா

அன்புடையீர்!
நிகழும் பிங்கள வருஷம் சித்திரை மாதம் 4-ந் திகதி
(16—4—77) சனிக்கிழமை
அதிகாலை 4 மணி தொடக்கம் 4-30 மணி வரை வரும் நல்வேளையில் ஆரம்பிக்க திருவருள்கூட்டியுள்ளது.
வழமைபோல் ஆதரவு தந்து வாழ்த்துமாறு வேண்டுகின்றோம்.
மலாயன் கபே நிறுவனத்தினர்.
36, 38, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
5926


## சாவகச்சேரியில் இருபஸ்கள் மோதின

மட்டுவில், வெள்ளி

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச பஸ்ஸும் சாவகச்சேரியை நோக்கி வந்து கொண்டிருந்த இ. போ ச பஸ்ஸும் நேற்று மோதிக்கொண்டன. எனினும் பிரயாணிகள் எவரும் காயமடையவில்லை.

இந்த இரு பஸ்வண்டிகளின் மோதலைத்தொடர்ந்து நுணுவிலுக்கும்சாவகச்சேரிக்குமிடையில் பிரதான கண்டி வீதியில் சுமார் 5 மணி நேரம் வாகனப் போக்குவரத்துக்கள் அடியோடு துண்டிக்கப்பட்டன.

சாவகச்சேரிப்பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்ற இந்த விபத்தைத் தொடர்ந்து பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

இப்பொழுது சகல வாகனப் போக்குவரத்துக்களும் நுணுவில் பருத்தித்துறைவீதி ஊடாகச் சென்று, கல்வயல்பெருங்குளம் வீதிவழியாக சாவகச்சேரியைச் சென்றடைகின்றன. தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது. (அ)

இன்று

## 'குழந்தைக் குரல்' வெளியீடு

யாழ்ப்பாணம், சனி

திரு. ச. கந்தசாமி எழுதியுள்ள கவிதைத் தொகுதியான 'குழந்தைக்குரல்' வெளியீடும், அவருக்கு சேவைநலம் பாராட்டுதலும் இன்று மாலை சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்பாராட்டுவிழாவில் திருவாளர்கள் ஆ. சு. சற்குணநாதன், மா. ப. இராசகுரு, புதுமைலோலன் உட்பட பலர் உரையாற்றுவர்.

## சைக்கிள் ஓட்டப் போட்டி

நல்லூர், சனி

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க 57 வது ஆண்டு விழாவையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 15 மைல் சைக்கிளோட்டப் போட்டியொன்றை நடாத்தவுள்ளனர். இச்சைக்கிளோட்டப்போட்டியில் எவரும் பங்குபற்றலாமென விளையாட்டுக் காரியதரிசியான திரு.ப. நடனசிகாமணி அறிவித்துள்ளார்.
(அ)

...

## அடுத்த வாரம் செயல்படும்

நெல்லியடி,வெள்ளி

பருத்தித்துறை வாடகைச் சபை அடுத்த வாரம் முதல் செயல்படவுள்ளதாக இச்சபையின் தலைவர் சட்டத்தரணி வி.மகாலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வீடமைப்பு அமைச்சரால் இவ்வாடகை சபை உறுப்பினர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டதும்,இச்சபை உறுப்பினர்களின் முதலாவது கூட்டம் இச்சபையின் தலைவர் சட்டத்தரணி வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை நகரசபை, நெல்லியடி பட்டிண சபை, புலோலி, கட்டைவேலி கிராம சபைகள் ஆகியவற்றுக்குட்பட்ட வீட்டுவாடகை சம்பந்தமான புகார்களை இச்சபை விசாரணைசெய்யும் விசாரணைகள் யாவும் பருத்தித்துறை நகரசபையில் நடைபெறும்.
(உ)

# கல்வியங்காட்டில் இன்றும் நாளையும் நடைபெறும்விழா

நல்லூர், சனி

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 57வது ஆண்டு நிறைவு விழாவைமுன்னிட்டு மாபெரும் விவசாய அறிவுப்போட்டியும் கருத்தரங்கும் இன்று சனி பிற்பகல் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. சிவ. முத்துலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விவசாய அறிவுப்போட்டிக்கும் கருத்தரங்கு நிகழ்ச்சிக்கும் பிரதம அதிதியாக யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. பி. எஸ். பற்றிக்கும் அரச சட்டத்தரணி திரு. சி. கனகரத்தினமும் கலந்துகொள்வர்.

விவசாயக்கருத்தரங்கில் சுரோரு லிமிட்டெட்டைச் சேர்ந்த திரு. கே. பொன்னையா, லங்கம் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. இ.சி.சேவியர், சி. ஐ. ஏ. எஸ். ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. இ. என். இரத்தினம், சி. ஐ. சி. ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. எஸ். பாலசிங்கம், பவர் அன் கொம்பனியைச் சேர்ந்த ஜனப் எம். ஐ.எம். சாகிர், ஹேகெம் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. க. நா. ஜெயசீலன் ஆகியோர் விவசாயக் கருத்துக்களை வழங்குவர்.

விவசாய அறிவுப் போட்டியைத்தொடர்ந்து திரைப்படக் காட்சியும் நடைபெறவுள்ளது.

நாளை

இவ்விழாதொடர்பாக நாளை ஞாயிறு மாலை 'கம்பராமாயணத்தில் வரும் ஈழத்து வீரர்களுள் சிறந்தவன்' என்னும்விஷயம்பற்றியபட்டிமன்றம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் சங்கத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. இராவணனே சிறந்தவனென திரு. எஸ். இந்திரராஜா, திரு. செ. சரவணபவன் ஆகியோரும், கும்பகர்ணனே சிறந்தவனென திரு. சு. இராசநாயகம், திரு. நா. கந்தையா ஆகியோரும், இந்திரசித்தே சிறந்தவனென சட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் திரு. க. நித்தியானந்தம் ஆகியோரும் வாதிப்பர்.

நாமார்க்கும் குடியல்லோம் என்னும் விஷயம்பற்றி திரு. வி. பொன்னம்பலம் சிறப்புரையாற்றுவார்.

'எங்கள் எதிர்காலம்' என்னும் விஷயம்பற்றிய கவியரங்கம் சொக்கன் தலைமையில் நடைபெறவுள்ளது. கவிஞர்கள் பா. சத்தியசீலன், காரை சுந்தரம்பிள்ளை, அரியாலையூர் ஐயாத்துரை, மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் கவியரங்கில் கலந்துகொள்வர்.

இவற்றைத் தொடர்ந்து 'வடக்கும் தெற்கும்', 'நீங்காத நினைவுகள்', 'மருந்தோ மருந்து' ஆகிய நாடகங்கள் இடம் பெறவுள்ளன. (அ)

# சாவகச்சேரியில் இன்று விளையாட்டு விழா

மட்டுவில், சனி

சாவகச்சேரி தென்னகத் தாரகையின் ஆறுவது ஆண்டு விழா இன்று சனி காலை 6 மணிக்கு ஆரம்பமாகிறது. சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய அதிபர் திரு.விக்டர் அல்விஸ் கழகக் கொடியை ஏற்றி வைத்து, நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்குவார். இதைத் தொடர்ந்து ஆண்டு விழா சிறப்புமலர் வெளியீடு விழா நடைபெறும்.

இதைத் தொடர்ந்து 6-30 மணிக்கு ஆண்கள் 5மைல் மரதன் ஓட்டம், 7-30 மணிக்கு பெண்கள் 5மைல்சைக்கிலோட்டம், 8-30மணிக்கு ஆண்கள் 15மைல் சைக்கிலோட்டமும் ஆரம்பமாகும்.

பிற்பகல் 2மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் சாவகச்சேரி எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் ஆரம்பமாகும் இதில் கிறீஸ் கம்பம் ஏறுதல், தலையணைச்சண்டை, கழகங்களுக்கான கயிறிழுப்புப் போட்டி, 'செற் அப்' கரப்பந்தாட்டப் போட்டியும், தொடர்ந்து பாலர் நிகழ்ச்சியும், பெண்கள் சங்கீதக் கதிரை விசேஷ உடைப் போட்டிகளும் இடம்பெறும்.

இதைத் தொடர்ந்து இரவு நிகழ்ச்சிகள் சமூகஜோதி திரு. எஸ். கே. மயில்வாகனம் தலைமையில் ஆரம்பமாகும்

(7-ம் பக்கம் பார்க்க)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 15037

செல்லையா இராமச்சந்திரன்,
17, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

சின்னத்தம்பி ஜெயரத்தினம், சிறுவர் பாடசாலை, பிரதானவிதி, காங்கேசன்துறை. தனிப்பட்ட முறையிலும் A/1527-ம் இலக்க வழக்கில் காலஞ்சென்ற மனைவி சாரதாதேவியின் சொத்துக்களுக்குச் சட்டப் பிரதிநிதியாகத் தெரிவு செய்த வகையிலும்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு/15037-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1977-ம் வருஷம் 5-ம் மாதம் 31-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 7000/-ம் 17-9-75 தொடக்கம் 27-8-76 வரைக்கும் ரூபாய் 3500/-க்கு 14% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 176/64 சதம். இதில் நடைபெற்ற செலவு 523/90 சதம். நடைபெறவேண்டிய செலவு 160/82 சதம் மேலதிகச்செலவு 91/92 சதம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் டிஸ்திறிக்குப் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை ''மேற்கிலாண்டிப்புலம்'' பர. நீ. 3½ இதில் கிழக்குப் பக்கமாகப் பர. நீ. இலா. இரண்டும் கிழக்கெல்லைக்காணிக் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலும் விடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு றேட்டு மேற்கு மிகுதி ஆதனம் பொன்னையா வைத்திலிங்கத்துக்குரியது. தெற்கு கையொழுங்கை இதடங்கலும்.

இ. கனகரத்தினம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

35/3, கொழும்புத்துறை வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
5928

# மந்திரிகளுக்கு மீது அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டு

# பஞ்சிலால் வெளியேற்றம்; சஞ்சய்மீது நடவடிக்கை இல்லை

## காங்கிரஸ் தொடர்ந்து விவாதம்

புதுடில்லி, ஏப்ரல் 15

**இந்திரா அரசில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த பஞ்சிலால் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். ஆறுவருட காலத்துக்கு காங்கிரஸ் பிரநிதித்துவம் இவருக்கு மறுக்கப்பட்டிருக்கும்.**

காங்கிரஸ் காரியக்கமிட்டி ஏகமனதாக இத்தீர்மானத்தை நேற்று எடுத்தது. லோக சபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தமைக்கான காரணத்தை ஆராயும் பொருட்டு இம்மாதம் 12-ம் திகதி புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி நான்காவது நாளாக தொடர்ந்து கூட்டத்தை நடத்தியது.

மாநிலங்கள் தோறும் காங்கிரஸுக்கு ஏற்பட்டதோல்விக்கான காரணங்கள் பற்றி தனித்தனியே ஆராயப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சராக இருந்த பஞ்சிலாலின் நடத்தை பற்றி இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இவரைக் கட்சியிலிருந்து உடனடியாக வெளியேற்றவேண்டும் என்றுபலத்த குரல் எழுப்பப்பட்டது. பின்னர் இவரை தொடர்ந்து 6 வருட காலத்துக்கு கட்சியிலிருந்து வெளியேற்றுவதென ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

இந்திராவின் புதல்வர் சஞ்சய்காந்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கோரிக்கை எழுந்த போதிலும், அது முழுதாக வெளிக்கிளம்பவில்லை. காங்கிரஸ் கட்சியிலிருந்து அவர் ஏற்கனவே வெளியேறியிருப்பதாலும் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிவித்திருப்பதாலும் சஞ்சய் காந்தி மீது நடவடிக்கை எடுக்கும் பிரச்னை எடுபடவில்லை என்று நிருபர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

### இந்திராகாந்தி-சஞ்சய் பற்றி கண்டனம்

பஞ்சிலால் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது அநீதியான செயல் என்று ஜம்முகாஷ்மீர் முன்னாள் மந்திரி ஏ. எம். தாரிக் கருத்து வெளியிட்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் பருவா, பிரதமர் இந்திராகாந்தி, மகன் சஞ்சய்காந்தி, ஓம் மேத்தா ஆகியோரும் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்க வேண்டியவர்கள் என்று இவர் கூறியுள்ளார். ஆயுட்காலம் வரை இவர்களுக்கு காங்கிரஸில் இடமளிக்கக்கூடாது என்று இவர் தெரிவித்தார்.

### குடும்பக்கட்டுப்பாடு காரணம்

உத்தரபிரதேச முன்னாள் யூனியன் அமைச்சர் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக்கண்டித்தார். காங்கிரஸின் படுதோல்விக்கு இது தான் முக்கிய காரணம் என்று அவர்தெரிவித்தார்.

## காங்கிரஸ் கூட்டத்தில் கண்டனம்

காங்கிரஸ் ஆட்சியின்போது செய்தித்துறை அமைச்சராக இருந்த வித்யாகரன் சுக்ளா அதிகாரதுஷ்பிரயோகம் செய்ததாக கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இவர்மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பலர் வலியுறுத்தினர்.

இது இப்படியிருக்க காங்கிரஸிலிருந்து ராஜினமாச் செய்துள்ள பல மூத்த அங்கத்தவர்களின் ராஜினமாவை தற்போது ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று காங்கிரஸின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சுவர்ண்சிங் அறிவித்துள்ளார். காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து பருவா ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து முன்னர் வெளியுறவு அமைச்சரான சுவர்ண்சிங் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய தலைவர் தெரிவு இடம்பெறும் வரை உறுப்பினர் எவரதும் ராஜினமாவை ஏற்பதில்லை என்றும், அடுத்த கூட்டத்தில் அவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என்றும் புதிய தலைவர் சுவர்ண்சிங் அறிவித்துள்ளார். (ஆ)

## ரசிகர்களைக் கவர்ந்த ரோஜு கீதம்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி தொழில் பயிற்சி நிலைய நிதிக்காக சென் பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற 'ஈஸ்ரர் நைட்' பொப் நிகழ்ச்சியின்போது சுப்பர் ஸ்டார் இசைக்குழுவின் இசை முழங்க ஸ்ரனி சிவானந்தன் யாழ்ப்பாணம் ரோஜு ஸ்தாபன கீதத்தை பாடியபோது பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் பலத்த கரகோஷம் செய்தனர். (அ)

## மாநில காங்கிரஸ் ஆட்சிகள் மீது புதிய அரசு பாரபட்சம்

### 9 உறுப்பினர்கள் கண்டனம்

புதுடில்லி, ஏப். 15

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த 9 காங்கிரஸ் உறுப்பினர்கள், ஜனதா அரசாங்கம் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட மாநில அரசுகள்மீது ஜனநாயக விரோதநடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகம் தப்பிவிட்டதாகக்கூறும் புதியஅரசாங்கம்ஜனநாயகரீதியில் அமைக்கப்பட்ட மாநில அரசுகளை வீழ்த்துவதில் ஈடுபட்டுள்ளதாக இவர்கள் கூறியுள்ளனர்.

காங்கிரஸ்அரசுகள் மாநிலங்களில் இருப்பதை விரும்பாத ஜனதாஅரசு அடிப்படை உரிமைகளுக்குமாறுகச் செயற்படுவதாகஇந்த9 உறுப்பினர்களும் கண்டித்துள்ளனர். (ஆ)

## இளைஞர்களுக்கு சந்தர்ப்பமளிக்க பழைய தலைவர்கள் ஒதுங்கவேண்டும்

### இந்திராவிடமும் வற்புறுத்து

புதுடில்லி, ஏப். 15


இளைஞர் காங்கிரஸை காங்கிரஸ் கட்சியுடன் இணைக்க வேண்டும் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இன்று வலியுறுத்தப்பட்டது.

இளைஞர்கள் விழிப்புணர்ச்சி அடைந்துள்ள இவ்வேளையில் இளைஞர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என்றும், இதற்கு முன்னோடியாக இந்திராகாந்தி போன்ற தலைவர்கள் காங்கிரஸிலிருந்து ஒதுங்கியிருந்து இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மேற்கு வங்காளம், உத்தர பிரதேசம், மற்றும் யூனியன் பிரதேசங்களில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்விக்கான காரணம்பற்றி இக்கூட்டத்தில் தொடர்ந்து ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஆ)

# எமக்கு ஏற்பட்ட தோல்வி எம். ஜி. ஆருக்கு ஏற்பட்டிருந்தால்...

## கண்டி கதிர்காமம் ஓடியிருப்பார் கருணாநிதி கூறுகிறார்



சென்னை, ஏப். 15

இதுவரைகாலமும் தி. மு.க. தலைமைப்பீடத்தையும், அதன் செயற்பாட்டையும் பாராட்டிக்கொண்டிருந்த பல உறுப்பினர்கள், லோகசபைத் தேர்தலில் தி. மு. க.தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கட்சி மாறும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், கட்சி மாறுவதன்மூலம் தமதுசொந்த வாழ்க்கையையும், எதிர்காலத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று பலர் கனவு காண்பதாகவும் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

தி. மு. கவை அழித்துவிடலாமென்று நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நினைக்கிறார். தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் எனக்குள்ள இடம் என்றென்றும் இருக்கத்தான் செய்யும் என்றும் திரு. கருணாநிதி குறிப்பிட்டார்.

திரு. கருணாநிதி மேலும் கூறியதாவது:

'பாவம் ஒருவனுடைய வாழ்க்கையை அவன் ஈடுபட்டுள்ள கட்சியின் தேர்தல் வெற்றி தோல்விகளுடன் கணக்கிட்டு, அவசர முடிவுக்கு வருகிறவர்களின் பட்டியலில் நடிகர் இராமச்சந்திரன் தன்னையும் இணைத்துக்கொண்டுள்ளார்.

ஒருகட்சி ஆளும்கட்சியானல் அதற்குப் பொறுப்புகள் இருக்கின்றன. அதனைப்போலவே எதிர்க்கட்சியானலும் அந்தப் பொறுப்புகளைச் சுட்டிக்காட்டி அவற்றுக்கெதிராகப் போர்க்குரல் கொடுக்கும் தியாக உள்ளத்தோடுகூடிய பல கடமைகளும் அந்தக்கட்சிக்கு இருக்கின்றன. இதையெல்லாம் மறந்துவிட்டு என்னவோ எம். ஜி. இராமச்சந்திரன் 'கருணாநிதி தலைமைப்பதவியை விடமாட்டேன் என்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்' என்று அங்லாய்க்கிறார். ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதை போல.

ஐந்தாண்டுகாலமாக கட்சியின் சட்டதிட்டங்களைப் பயன்படுத்தி அமைப்புகளின் தேர்தல்களை நடத்தாமல், பொதுக்குழு உறுப்பினர்களை அவரே நியமித்து, அந்த நியமன உறுப்பினர்கள்மூலமாகத் தன்னையும் கட்சிப் பொதுச்செயலாளராக நியமித்து. இன்னமும்

(5-ம் பக்கம் பார்க்க)

## அருட்கவியின் 'வழக்கம்பரை அம்மன்

சுழிபுரம், வெள்ளி

அருட்கவி சி. விநாசித்தம்பி வழக்கம்பரை அம்மன்மீது பாடிய பாமாலை, நூல் உருவில் வெளிவரவுள்ளது. வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினரால் இந்நூல் வெளியிடப்படவுள்ளது. அருட்கவி ஈழத்திலுள்ள தலங்கள் மீது பாமாலைகள் பாடி நூல் உருவில் வெளியிட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

நீதியான இலட்சியத்தைக் கொண்ட முயற்சி ஒரு போதும் தோல்வியடையாது. சத்தியவாக்கின் பயனுய் எவரும் முடிவில் புண்படுவதில்லை.

—காந்திமகான்.

ஈழநாடு
THE EELANADU

# பிரதமரின் செய்தி

"சமயங்கள் போதிக்கும் நெறிகளை அனுசரித்து நடப்பதன் மூலம் நாட்டில் ஒருமைப்பாட்டுடன் வாழ்வதற்கான ஒழுக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்."

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் விடுத்த செய்தியில் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்நாட்டில் வாழும் இந்துக்களும் பௌத்தர்களும் ஏனைய சமூகத்தினருடன் சேர்ந்து மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்ளும் சந்தர்ப்பம் சிங்கள-தமிழ்ப் புத்தாண்டுத் தினமாகும்.

இந்து மதமானாலும், பௌத்த மதமானாலும்சரி, கிறிஸ்தவ மதமானாலும், இஸ்லாமிய மதமானாலும்சரி எல்லா மதங்களுமே அன்பு செய் என்றே போதிக்கின்றன.

எந்த மதமும் 'கெடுதி செய்' என்று கூறவில்லை. நல்லவற்றைச் செய்யும்படிதான் அவை கூறுகின்றன.

எந்த மதத்திலும் யாரும் தவறு செய் என்று சொல்ல முடியாது.

ஆனல் மதங்களைப் பின்பற்றுபவர்கள் அந்த மதங்களின் போதனைகளைப் பின்பற்றி ஒழுகுகிருர்களா?

நமது நாட்டில் இதுவரை நடைபெற்ற பல சம்பவங்களை எடுத்துப்பார்த்தால், மொழியின் பெயராலும் மதத்தின் பெயராலும் அரசியலின் பெயராலும் எத்தனை உயிர்கள் அநியாயமாகப் பலியாகியிருக்கின்றனவென்று கணக்கிடமுடியாது

சகல மக்களுக்கும் நமது நாட்டில் வழிபாட்டுச் சுதந்திரம் இருக்கிறது

ஆனுலும் மத போதனைகளை மக்கள் சரியாகப் பின்பற்றியிருந்தால் இனம், மொழி, மதம் என்ற பெயரால் அநியாயமாக உயிர்ப் பலி ஏற்பட்டிருக்காது.

நமது நாட்டில்தான் பள்ளிக்கூடங்களில் சமயம் ஒரு கட்டாய பாடமாக இருக்கிறது.

அப்படியிருந்தும் நாட்டில் வேற்றுமையும் குற்றச் செயல்களும் மலிந்திருக்கின்றன.

மத போதனைகளை மக்களுக்கு எடுத்துக்கூறும் கடமையை உடையவர்கள் தமது பொறுப்பைச் சரிவரச் செய்யாததுதான் இதற்குக் காரணமென்று சொல்லலாமா?

அல்லது மத போதனையை விட சாத்தானின் போதனை அதிக வலுவானதென்று சொல்லலாமா?

என்ருலும் கடவுள் பக்தி நிறைந்த பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா "சமயங்கள் போதிக்கும் நெறிகளை அனுசரித்து நடப்பதன் மூலம் நாட்டில் ஒருமைப்பாட்டுடன் வாழ்வதற்கான ஒழுக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்" என்று புத்தாண்டுச் செய்தியில் கூறியிருப்பது, எதிர்கால அரசியலிலேயே நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கலாம்.

சிங்களவர்களாக அல்லது தமிழர்களாக அல்லது வேறு எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒரு நாட்டவரென்ற முறையில் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்படவேண்டும் என்று புத்தாண்டில் திடசங்கற்பம் செய்துகொள்ளவேண்டும் என்றும் அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளிலும் ஏனைய துறைகளிலும் நாடு வேகமாக முன்னேறி வருகின்றபோதிலும் இதுவரை எல்லாத்தேவைகளிலும் தன்னிறைவு பெறவில்லையென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்றும் பிரதமர் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

எல்லாத் தேவைகளிலும் தன்னிறைவு காணமுடியாததற்கு சமூகவேற்றுமையும் தேசிய ஒருமைப்பாடும் இல்லாததுமே காரணமென்பதைப் பிரதமர் நன்கு உணர்ந்திருக்கிருர் என்பதையும் சமூக வேறுபாடுகளை நீக்கி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் புனித முயற்சியில் அவர் முழுமூச்சுடன் ஈடுபடுவதற்கு முன்வருகிருர்என்பதையுமே அவரின் புத்தாண்டுச் செய்தி எடுத்துக் காட்டுகிறதென்று கருத இடமுண்டு.

சிறுபான்மையினரின் மனதிலுள்ள அச்சத்தையும் அவநம்பிக்கையையும் நீக்குவதற்குப் பிரதமருக்கு இந்தப் புத்தாண்டு ஆத்மபலம் அளிக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

## யாழ். மீரானியாக்கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மீரானியாக்கல்லூரி பரிசளிப்புவிழா அல்ஹாஜ் மௌலவி எம். எம். அப்துல்கரீம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் அல்குர்ஆன் மனன, கையெழுத்து, தஜ்வீத் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எம். எம். அல்ஹாஜ் அப்துல்காதர் பரிசில்களை வழங்கினுர்கள். சுமார் 1500 ரூபா பணப்பரிசுகளும் அல்குர்ஆனும் வழங்கப்பட்டன.

பரிசில்கள்பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:

5 சூறுக்கள் மனனம்: சூறு ஸஜதா, யாசீன், ரஹ்மான் முல்கு, வாகிஆ— ஆண்கள்—முகம்மது நைரூஸ், முஹம்மது ஹஸன், முஹம்மது நௌபர் பெண்கள் - ரஸானு, எம் எஸ். ஏ. அனீஸா, ஏ. ரம்ழா.

சூறுலுஹா-விலிருந்து -சூறு நாஸ்வரை-மனனம்; ஆண்கள்: முஹம்மது ஹிபதுல்லா, முஹம்மது நிஸர், முஹம்மது நைஸர், பெண்கள்: எம். வஜீஹா, பரீஹா, எம். ஏ. ரிஸானு.

பார்த்துஓதுதல்: 30 ஜுஸ் உக்கள்: ஆண்கள்: முஹம்மது நௌபர், முஹம்மதுநைரோஸ், எச். எம். மன்சூர், பெண்கள்: ரிஸானு, எச். எம் ஷம்சுன்னிஹார், ஜனுரஸியா.

பார்த்து ஓதுதல்: சூறு-ஹாமீம்—விலிருந்து-சூறு-அம்மவரை—ஆண்கள்: முஹம்மது ஹஸன்: எம். ஐ.எம். ஜௌஸி முகம்மது நைஸர்.

பெண்கள்: எம். முனீரா. எம். எஸ். வஜீஹா, பரீஹா.

பார்க்காமல் எழுதுதல்: சூறு பாதிஹா - ஆண்கள்: முகம்மது நைரூஸ், முகம்மதுஹஸன், முகம்மதுபாரூக், பெண்கள்—ஜனுரஸியா, எஸ். ஈ. எம். ரிபைனு, ரஸ்மியா.

பார்த்துஎழுதுதல்: ஆண்கள் முகம்மது நௌமர், எம் ஏ. எம். பௌஸ், நஜீப். பெண்கள்: எம். எஸ். ஏ. அனீஸா, பர்ஸானு, ஷம்ஸிய்யா. (அ)

## தமிழாராய்ச்சிமாநாடுநடத்தும்

# செனகல் நாடும் தலைவர் சின்ஹோரும்

— யு. எம். ஏ. தருமரத்தினம் —

ஐந்தாம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்கு எந்தவொரு நாடுதானும் முன்வராத நிலையில், தமிழர் வதியும் ஏதாவதொரு நாடுமுன்வந்துமேற்படி மாநாட்டை நடத்தித்தர வேண்டுமென்று அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் விடுத்தவேண்டுகோளை ஏற்றுமாநாட்டைத் தமது நாட்டில் நடத்தும்படி முதல் வேண்டுகோளை விடுத்தார் செனகல் நாட்டின் குடியரசுத் தலைவர் லியோபோல்ட் சேதார் சின்ஹோர். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினுல் ஒழுங்குசெய்யப்படும் அதன் அடுத்த மாநாடான ஐந்தாவது மாநாட்டை செனகல் நாட்டில் அதன் தலைநகரான டாக்கா நகரில் நடத்த முன்வருமாறு சின்ஹோர் வேண்டுகோள் விடுத்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் ஜனவரி 1974-ல் குறிப்பிடப்பட்டபடி நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நடத்திமுடிப்பது சாத்தியப்படுமா என்று சர்ச்சை எழுந்த நேரத்தில், அந்நாட்களில் இந்தியாவிற்கு ராஜாங்க வருகைபுரிந்திருந்த சின்ஹோர் அப்போதய மாநாட்டையே யாழ்ப்பாணத்தில் நடத்துவது சாத்தியப்படாவிட்டால் தமது நாடான செனகலில் அதனை நடத்துமாறு அழைப்பு விடுத்திருந்தார். அத்துடன் மாநாடு, செனகல் நாட்டின் தலைநகரான டாக்காவில் நடத்தப்படும் பட்சத்தில் அதற்கு வேண்டப்படும் உதவிகளையும், ஒத்தாசையையும் தமது அரசாங்கமே செய்து தருமென்றும் வாக்களித்திருந்தவர் அவர் என்பது நினைவு கூரத்தக்கது.

இத்தனைக்கும் செனகல் நாடு தமிழர் வாழும் ஒரு நாடல்ல. ஆயின், தமிழின் மீது தணியாத பற்றுக்கொண்ட தமிழாராய்ச்சியாளரான சின்ஹோரைத் தனது தலைவராகக்கொண்டுள்ளது. அவரது அமைச்சரவையில் அந்நாட்டின் கல்வி அமைச்சராக இருப்பவரும் ஒரு தமிழாராய்ச்சியாளர் என்பதும் சிறப்பாகக்குறிப்பிடத்தக்கது. இவ்விருவரும் எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாக இன்று செனகல் நாட்டின் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியும் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. தமிழர் வதியும் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்திலும். இந்திய மக்களுக்காக தென்னுபிரிக்காவில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப்பீடங்கள் இல்லாதிருக்கும்போது செனகல் நாட்டில் தமிழ்க்கல்விக்குவசதி செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டல் தகும். அதுவும் தென்னுபிரிக்காவிலுள்ள இந்தியருள் மிகப்பெரும்பான்மையினர் தமிழ்மக்கள் என்ற உண்மையை நினைவில் இருத்திப்பார்க்கும்போது சின்ஹோர் செய்துதந்திருக்கும் வசதியைத் தமிழ் உலகு என்றும் மறக்கமாட்டாது.

செனகல் நாட்டினத்தார் திராவிட இனவழிப்பிரிவினரே என்பது லியோபோல்ட் சேதார் சின்ஹோரின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அதற்கான சான்றுகள் இன்று அங்கு ஆராய்ச்சியாளரால் ஆராயப்பட்டு வருவதாகவும் அவரே கூறியுள்ளார்.

கடல்கடந்தநாடுகள் பலவற்றில் கோடிக்கணக்கான தமிழர் இன்று தம் தாய்மொழியாம் தமிழ்மொழியை எழுதவும், வாசிக்கவும், பேசவும் மறந்து நாமமது மட்டும் தமிழராகக் கொண்டு வாழும் இப் பூவுலகில் ஆபிரிக்கக் கண்டத்து நாடொன்றின் குடியரசுத் தலைவரே தமது இனத்தவர் திராவிட வழித்தோன்றல்களே என்று மார்புதட்டிக் கூறுவது தமிழ்பேசும் மக்களுக்கு மிகவும் உவப்பளிக்கும்செய்தியே!

மொரிசியஸ், டிறினிடாட், மேற்கு இந்தியத் தீவுகள் போன்ற பல நாடுகளில் தமிழைத் துறந்து வாழும் தமிழர் பிரெஞ்சு மொழியையே எழுதவும் பேசவும் வழக்கில் கொண்டுள்ளனர். ஆனகாரணத்தினுல் செனகலில் நடைபெறப் போகும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பிறிதொரு வழியிலும் சிறந்த தமிழ்த் தொண்டை ஆற்றும் வாய்ப்பைப் பெறுகிறது செனகல் நாட்டின் ஆட்சிமொழி பிரெஞ்சு. இதுவரை வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் தமிழாராய்ச்சி மாநாடுகளில் தமது கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதிப் படிப்பதே வழக்கம். பிரான்சின் பாரிஸ்நகரில் இடம்பெற்ற மூன்றுவது மாநாடு ஓரளவு புறநடையாக அமைந்திருக்கக் கூடும். செனகல் மாநாட்டில் பிரெஞ்சுமொழியிலும் அதிகமான கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும் வாய்ப்பு உண்டாகிறது. செனகல் அரசும் தமிழாராய்ச்சியில் தற்போது அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதால், ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளும் பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்படும் வாய்ப்புண்டாகிறது. இதன் காரணமாக அப்படிப்பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்படும் கட்டுரைகள் நூலுருப்பெறும் போது இன்று தமிழை மறந்து பிரெஞ்சுமொழியைத் தத்து எடுத்துக்கொண்டிருக்கும் மொறிசியஸ், டிறினிடாட் போன்ற நாடுகளைச் சேர்ந்த தமிழர்களும் தமிழ்மொழியின் அருமை பெருமைகளை அறியவும் உணர்வுபெறவும் காரணமாகும். இம் மாநாடு தமிழாராய்ச்சி மாநாடுகள் வரிசையில் ஒரு மைல் கல்லாகஅமைந்தாலும் அதில்வியப்பில்லை. அத்துடன் பிரஞ்சுமொழிமூலம்தமிழ் கற்பதற்கான நூல்களும் எழுதப்பட இம் மாநாடு வழிவகுக்குமெனஎதிர்பார்க்கலாம். இந்நாள் வரை வெளிநாட்டார் ஆங்கில மொழி மூலமாகவே பெரும்பாலும் தமிழ்மொழியைக் கற்று வந்தனர். பிரஞ்சு மொழி பேசுவோர் நேரடியாகப் பிரஞ்சுமொழி மூலமே தமிழறிவைத் தேடிக்கொள்ள வசதிகள் பெருகவேண்டும். பிரஞ்சு மொழி மூலம் தமிழ் கற்பிக்கும் சாத்தியத்தின் அவசியம் உணரப்படுமாயின், அது அயல் மொழிகள் பேசுவோருக்கு மட்டுமல்லாது இன்று தாய்மொழியை மறந்து வாழும் தமிழரையும் தமிழராக மாற்றுவதற்கு வழிவகுக்கும். கடல்கடந்த நாடுகளில் தமிழை மறந்து பிரஞ்சுமொழியைப் பேசிவரும் தமிழர்களுக்காக அதிகம் பச்சாத்தாபப்படும் உலகத்தமிழர் பண்பாட்டுக்கழகம் இதுவிஷயத்தில் பாண்டிச்சேரி அரசை ஊக்குவிப்பது பயன்தரக்கூடும். பாண்டிச்சேரி அரசும் செனகல் நாடும் கலாச்சாரப் பரிவர்த்தனைகள் மூலம் இதில் கூட்டாகச் சிறந்த பணி புரியலாம். ஆகவே பெயரளவில் தமிழர்களாகவாழும் இலட்சோபலட்சம் தமிழர்கள் மீண்டும் தமிழராக மாற ஊக்குவிப்பதற்காக வசதிகள் வாய்ப்புக்களை உருவாக்கும் மாநாடாக செனகல் மாநாடு ஏற்றம் பெறுகிறது. இத்தனை சிறப்புக்களோடு கூடியதாக இம்மாநாட்டை நடத்த முன்வந்திருக்கும் செனகல் நாட்டைப்பற்றியும் நம் தமிழர் தெரிந்துகொள்ளவேண்டாமா?

### செனகல் நாடு

அத்திலாந்திக் பெருங்கடலில் மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு சுதந்திரக் குடியரசு நாடுதான் செனகல். இங்கு உள்ள ஒரு நதியின் பெயரும் செனகல்தான். நாட்டின் விஸ்திரணம் 76,224 சதுர மைல்களாகும். சனத்தொகை 3,400,000 ஆகும். செனகல் நாட்டின் தலைநகர் டாக்கா. உத்தியோகமொழி பிரஞ்சு மொழி. பேசப்படும் மொழிகள் சுடானிய மொழி. அரபு மொழி, பிரஞ்சுமொழி பின்பற்றப்படும் சமயங்கள் இஸ்லாம், பழங்குடிகளது சமயங்கள், ரோமன் கத்தோலிக்க சமயம். நாட்டின் மிக உயர்ந்த மலையாகிய ப்புத்த ஜாலோன் 1,610 அடி உயரமுள்ளது. தொழில்: கமத்தொழில், மீன்பிடி, பண்ணை வளர்ப்பு ஆகியன. ஏற்றுமதிப் பொருள் நிலக்கடலை.

பதினைந்தாம் நூற்றுண்டில் வேர்டா முனைக்கு அப்பால் இருந்து போர்த்துக்கேயர் செனகல் நாட்டுள் நுழைந்தனர். பதினேழாம் நூற்றுண்டில் பிரஞ்சுக்காரர் ஒரு கோட்டையை அமைத்தனர். பரந்த அளவிலான அடிமை வர்த்தகத்தின் மையமாக செனகல் விளங்கிற்று. 1815க்குப் பின்னரே செனகல் பிரதேசம் ஒரு பிரஞ்சுக் காலனியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1958 ம் ஆண்டில் செனகல் நாடு பிரஞ்சு சமுதாயத்துக்குள் தன்னுட்சி பெற்றது. 1959 ல் சூடான் குடியரசுடன் செனகல் இணைந்து மாலி சமஷ்டியை நிறுவிற்று. ஆயினும் 1960 ல் மாலி சமஷ்டியில் இருந்து அது விலகிக்கொண்டது. 1960 ஆகஸ்டில் சுதந்திரமடைந்ததன் பெறுபேருகஇன்று ஐ.நா. சபையிலும் உறுப்புரிமை பெற்றுள்ளது.

செனகல் நாட்டின் குடியரசுத் தலைவரான லியோபோல்ட் சேதார் சின்ஹோர் தலைசிறந்த ஒரு பிரஞ்சுக் கவிஞர். ஆபிரிக்கக் கண்டத்து அரசாங்கத் தலைவர்களுள் பெரும் பிரபலஸ்தர். இரண்டாம் உலகப் பெரும் போரில் பிரஞ்சுப்படையில் பணியாற்றியிருப்பவர், செனகல் சுதந்திரம் அடையுமுன்பு பிரான்சின் தேசியசபையில் செனகலுக்கான பிரதிநிதியாகத் தெரிவு பெற்றவர். நுண்ணறிவாளர், தலைசிறந்த எழுத்தாளர். (அ)

## இணைப்புக் குழுக் கூட்டம்

வேலணை, வெள்ளி

யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் இம்மாதம் 26-ம் திகதி யாழ். கச்சேரியில் நடைபெற விருக்கின்றது. (அ)

# "தமிழ்நாடு விடுதலை அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்"

## இளைஞர்களின் விருப்பம் இதுவே

— கா. சிவயோகநாதன் —

அன்புள்ள மு. அம்பலவாணர் வள்ளல்!

1969 ஆவணி 16-ம் தேதி நான் தமிழ்நாடு கழகத்தின் சார்பில் 'தமிழ்நாடு' பத்திரிகையில் சுதந்திர தன்னுதிக்கமுடைய 'ஒரு தமிழ் நாட்டை' பெறுவதே எமது தலையாய கடன் என்பதை ஈழத்தமிழகத்தாருக்கு எடுத்துக் கூறியிருந்ததைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். நான் இன்றல்ல என்றுமே இவற்றை உள்ளூர நடைமுறைப்படுத்த விருப்புடையேன். இவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தகுதி உடையவர்கள் என்றும் அதை முன்முதல் கோரிய உரிமையும், திரு. தியாகராசாவை சாருமென்றும் மு. அம்பலவாணர் அவர்கள் அரசியல் விவாத மேடையில் எழுதியிருந்ததை பார்த்தேன். அவர் எழுதியிருந்த விடயம் முற்றிலும் உண்மையே.

### விவாதமேடை

''தமிழ்நாடு'' எனும் விஷயம்பற்றியும், 'தமிழ்நாடு' தமிழ் மக்கள் காணுவிட்டால் தொடர்ந்தும் அடிமை நிலைக்கொப்ப வாழவேண்டிய நிலை எமக்குண்டு என்பதை உணர்த்தி நிட்சயமாக நாம் ஓரணி திரளவேண்டும் என்று முதல் முதல், குரலெழுப்பியவர்கள் என்றல் அது வி. நவரத்தினம் (சுயாட்சிக் கழகம்) ஸி. சுந்தரலிங்கம் ஆகிய இருவர்களையும் முதன்முறையாகச்சாரும் என்பதைச் சுட்டிக்காட்ட ''வள்ளலோ, அன்றி மு அம்பலவாணரோ கூற மறந்துவிட்டார்கள்.

1964-ம் ஆண்டில் கூட்டரசாங்கம் ஆதிக்கத்தில் இருந்தபொழுது தமிழரசுக்கட்சியின் சார்பில் திருச்செல்வம் 3-4-65-ல் என். எம். பெரேராவுடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தினர் இது பற்றி 30-4-65-ல் சமசமாஜக்கட்சியில் நம்பிக்கை வைத்திருந்தனர். அதன் பின்பு திருச்செல்வம் மேலும் சிலவற்றைக் கூறும்போது கூறியதாவது:

''தமிழரசுக்கட்சியின் அங்கத்தவரில் ஒருவனைக ஒன்று கூறவிரும்புகிறேன். எமது அரசாங்கத்துக்கு அரசகரும மொழிச்சட்டத்தை மாற்றும் நோக்கம் இல்லவே இல்லை இது எமது உறுதி'' என்று கூறியிருப்பது. என். எம். பெரேராவுடன் கதைத்தற்கு முன்னுக்குப் பின் முரண்பாடாக உள்ளது. (என். எம். பெரேராவுடன் கதைத்ததை பற்றியும் அரசாங்கத்தைத் தோற்கடித்துபற்றியும் ''குசா'' கேட்ட கேள்விக்குப் பதிலளித்ததை ''Senate Hansard 1965 Col [641] ஐ பார்க்கவும்.) இன்னும் மேலும் விரிவாக எழுதுவதால் புரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆனல் ''அரசியல் அரங்கில் இடம் பெற அதிக இடமிருக்காது என்பதால் அதிகப்படி குறுக்கி இருக்கின்றேன்.

### தமிழரசுக்கட்சி நோக்கம் தமிழ்நாடா?

''பரிஸ்டர் மு. அம்பலவாணர் கூறி இருந்ததுபோல கடந்த இடைத்தேர்தலில் தமிழரசுக்கட்சியினர் கூட்டணியின் சார்பில் ஆறு அம்சத்தையே முன்வைத்து போட்டியிட்டனர். அவ்வமயம் 'தமிழ்நாடு' அவர்கள் நோக்கமல்ல' அதே நோத்தில் திரு. ஸி. சுந்தரலிங்கத்தை ஏமாற்றுவதற்காக ஒருவேளை உங்கள் கொள்கையாகிய ''தமிழ்நாட்டு'' கொள்கையை ஆதரிக்கின்றோம் என்று கூறி தம் பாதைக்கு இழுத்துச் சென்றிருக்கலாம். இருப்பினும் மீண்டும் தன்நிலை அடைந்தது போற்றற்குரியது என்று எண்ணுகின்றேன்.

### இளைஞர்களுக்கு இடம்

தமிழரசுக்கட்சியிலேயே அதிதீவிரமான, வலுவுள்ள, மூளைத்திறன் கொண்டவரான முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினரான வி. நவரத்தினம் (சுயாட்சி) அவரின் இறங்கண்டு மூளை என்றுவர்ணித்தார்கள். கருத்து வேறுபாட்டினல் கட்சியிலிருந்து வெளியேற்றினுர்கள்; இவர்கள் செயலை நானுகை எழுதித்தான் புரியவேண்டும் என்பதல்ல.

கூட்டணியினர் பத்திரிகையில் செய்தியொன்றை வெளியிட்டனர். அதில் பின்வருமாறு அமைந்திருந்தது. 'அரசு தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்தால் அவர்களுக்கு இறங்குபடியாகவும் எங்களுக்கு ஏறுபடியாகவும் அமையும்' என்று கூறியிருந்தார்கள். இச் செய்தியை எந்த மனிதன்தானும் பார்த்தால் கூட்டணியினர் முழுமனதோடு தமிழர் பிரச்சினை தீர்க்கப்படுவதை விரும்பவில்லை என்ற உண்மையும் இச் செய்தியைத் தொடர்ந்து சிங்கள மொழிபெயர்ப்பு சிங்கள மக்கள் மத்தியில் கிடைத்ததும் கே. எம். பி போன்றோர் போல் இன்னும் ஒரு பகுதியினர் இருந்தால் அவர்கள் மூலம் உரிமை கிடைக்காமல் செய்யலாம் என்பதே நோக்கம் என்பதை நன்கு அறியக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் இவ்வெதிர்ப்பை ஒரு பக்கமும் பேச்சுவார்த்தையை மற்றொருபுறமும் வைத்துத் தீர்க்கப்பட்டாலும் நடைமுறைப்படுத்த அரசுக்கு இரண்டு மாதத்துக்குள் என்ன அதிகாரம் உண்டு என்பதை அறியாது இவர்கள் பேச்சுவார்த்தை செய்வதும்வெறும் கண்துடைப்புஎன்பதை மக்கள் நன்குஉணர்ந்துள்ளார்கள் என்பதை ஏன்தான் இவர்களுக்குப் புரியவில்லையோ?

தமிழர் கூட்டணி என்ற பெயரிலே ஒன்றை அமைத்து வெற்றிகரமாக நடப்பதற்குப் பல காரணிகள் உண்டு.

1. தங்கள் நிலை பலவீனமடைந்தமை.

2. தமிழ்க்காங்கிரஸை இவர்கள் என்நிலைக்குக் கொண்டு வந்தார்களோ அந்நிலைக்குத் தாங்களும் மாறியமையே முக்கியமான காரணியாகும்.

பலவீனம் அடைய முன்பு தமிழ்நாடு கேட்ட கட்சிகள் வலுப்பெறும் நிலை கண்டு இக் கூட்டணி ஆரம்பமாகி இளைஞர்களின் பலத்தால் மேலோங்கி ''ஏறிய படியிலிருந்து ஏற்றியவனை எட்டி உதைக்கின்ற நிலைக்கு மாறிவிட்டார்கள்.''

### புதிய அமைப்பு வேண்டும்

முன்பு தமிழ்நாடு கேட்டவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ''தமிழ்நாடு விடுதலை அமைப்பு'' என்ற ஒன்றை உருவாக்கவேண்டும் என்பதே இளைஞர் பலர் விருப்பு. அவர்கள் விருப்பின் பிரகாரம் ''தமிழ்நாடு கேட்டவர்கள்!'' ஒன்றிணைந்தால் மாத்திரமே ஓர் சிறந்த தன்னுதிக்கமுடைய பரிபூரணத்துவ தனித் தமிழ் நாட்டைப் பெறமுடியும் என்பதே என் கருத்து. அதை விடுத்து முன்பு மேலே காட்டப்பட்ட கூட்டணியினர் குத்துவெட்டு செய்பவர்களே அன்றி தமிழ்நாடு காண்பவரல்ல என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

---

அரசியல் மட்டுமல்லத் ஆயுர்வேதம் பற்றியும் இப்போது விவாத மேடையில் சர்ச்சை கிளம்பியிருக்கிறது. யாழ். சித்தாயுள்வேதக் கல்லூரியில் அங்கீகாரம் பெற்ற விரிவுரையாளர்களில்லை என்று டாக்டர் மருதையினர் அறிக்கைவிட அதை மறுத்து திருமதி ப. சிறீதேவி அறிக்கை விட்டார். இல்லையில்லை அங்கீகாரம் பெற்ற விரிவுரையாளர்கள் இல்லவே இல்லை என்று அதற்குப் பதிலளித்தார் டாக்டர் மருதையினர். இன்று மருதையினருக்குப் பதில் சொல்கிறர் யாழ். சித்தாயுள் வேதக் கல்லூரி நிர்வாக அதிகாரி டாக்டர் அ. கெங்காதரன்.

அரசியல் மட்டுமல்ல ஆயுள்வேதக் கல்லூரி விஷயத்திலும் விவாதம் சூடுபிடித்திருக்கிறது. எந்தப் பிரச்சினையையும் விவாத மேடைக்குக் கொண்டுவந்து அலசி ஆராயலாம். ஆனல் தயவுசெய்து தனிப்பட்ட முறையில் தாக்குவதற்கு மட்டும் இந்த மேடையில் இடமில்லை

—ஆசிரியர்

---

சித்த ஆயுள்வேதக் கல்லூரியில்

# அங்கீகாரம் பெற்றவர்கள் இல்லை என்று சொல்பவர்யார்?

## மருதையினருக்கு கெங்காதரன் பதில்

யாழ். சித்தாயுள் வேதக் கல்லூரியில் அங்கீகாரமற்ற விரிவுரையாளர்கள் இருப்பதாக டீ. ஏ. எம். எஸ். பட்டதாரிகள் சங்கச் செயலாளர் வைத்திய கலாநிதி க. மருதயினர் உண்மைக்கு மாருன அறிக்கையொன்றை6-4-77-ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். உண்மை நிலையை கல்லூரிவிரிவுரையாளர்ஒருவர் 9-4-77-ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகை மூலம் விளக்கியிருந்தார். மீண்டும் 11-4 77-ம் திகதிப் பத்திரிகையில் டீ. ஏ. எம். எஸ். சங்கச் செயலாளர் என்ற ரீதியில் 'அங்கீகாரம் பெருத பட்டதாரிகள் எமது கல்லூரியில் விரிவுரையாளர்களாக கடமையாற்றுகிறர்கள்' எனக் குறிப்பிட்டு பொது மக்கள் வைத்தியர்கள் மத்தியிலும், கல்லூரியின் தரத்தைக் குறைக்கும் வகையில் டாக்டர் க. மருதயினர் பிரயத்தனப்படுகிறர்.

இவ்வேளையில் யாழ். சித்தாயுள் வேதக் கல்லூரியின் நிர்வாக அதிகாரியாகிய நான் உண்மையான சிலதகவல்களை வெளியிடவேண்டியுள்ளது.

(1) இக்கல்லூரியில் அங்கீகாரம் பெருத பட்டதாரிகள் விரிவுரையாளர்களாக இல்லை. கல்லூரி அரசின் அங்கீகாரத்தை 1962-ம் ஆண்டுடில் இழந்தபோதும், 1962-ம் ஆண்டு கல்லூரியில் இருந்த மாணவர்கள் (முதலாம் வருடத்தில் பிரவேசம் எடுத்தமாணவர்கள் உட்பட) சகலரின் பட்டங்களையும் அரசு அங்கீகரித்தது. 1963-ம் ஆண்டுதொடக்கம் மேற்படி கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்ற பட்டதாரிகளினதும் பட்டங்களைத்தான் அரசு அங்கீகரிக்கவில்லை. டாக்டர் க. மருதயினரின் இரண்டாம் அறிக்கையில் குறிப்பிட்ட ஒழுங்கு நூலின் டீ. ஏ. எம். பட்டம் பெற்றவர்களுடைய ஆண்டாண்டுப் பெயர்ப் பட்டியலில் 174-ம் இலக்கத்துக்குரிய பட்டதாரிவரை அரசு அங்கீகாரம் பெற்ற பட்டதாரிகளே. இவர் உதாரணத்திற்குஎடுத்த153-ம் இலக்கத்துக்குரிய விரிவுரையாளர் திருமதி ப. சிறீதேவி அரச அங்கீகாரம்பெற்ற பட்டதாரி என்பதை டாக்டர் மருதயினரின்கவனத்துக்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

(2) முதலாவது அறிக்கையில் மாணவர்களினது சத்தியாக்கிரகத்தை திசை திருப்பி திருநெல்வேலிக்குப் போகச் சொல்லியிருக்கிறர்.

மாணவர்களுக்கு வேண்டியது அரசாங்கம் சுதேச வைத்தியத்துக்கென ஒதுக்கிய பணத்தில், சித்த வைத்தியத்துக்கென பல லட்ச ரூபா செலவில் பூரணமாகக் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாகப் பூட்டப்பட்டு கைதடியில் அமைந்துள்ள கட்டிடம். அவர்களுக்குத் தேவைபடும் கட்டிடம் திருநெல்வேலியில் அல்ல எனச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(3) ஆயுள்வேதத் திணைக்களமோ அன்றி சுகாதாரஅமைச்சு அதிகாரிகளோ யாழ்ப்பாணத்தில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

பூட்டப்பட்டுக் கிடக்கும் கல்லூரிக் கட்டடம் தற்பொழுது கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைப்பொறுப்பதிகாரியின் பொறுப்பில்தான் உள்ளது என்பதும், சுகாதார அமைச்சின் மேலதிகாரியின் காரியாலயம் நல்லூர் செட்டித்தெருவில் உளளது என்பதை நண்பருக்குச் சுட்டிக் காட்டுவதுடன், கட்டிடம் ஆயுர்வேததிணைக்களத்துக்கோ கல்வி அமைச்சுக்கோ அன்றி வேறு எந்த அமைச்சுக்கோ சொந்தமானது என்பது அல்லப்பிரச்சினை. அரசுக்குச் சொந்தமான அக்கட்டிடம் மாணவர்களின் உபயோகத்திற்கு அளிக்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

(4) யாழ்ப்பாணத்திற்கு இரண்டுசித்தவைத்தியக்கல்லூரிகள் வெவ்வேறு தரமான பட்டங்களை வழங்கிச் சித்தவைத்தியத்தின் முன்னேற்றத்தை இரு கூருக்கக் கூடாது என்ற தேசிய நலன் கருதியே எங்கள் சங்கம் எதிர்த்தது.

தேசியநலன் கருதும் நண்பரும் அவரது சங்கமும் சித்த வைத்தியத்துக்கு ஒருவிதமான தேசிய நலனும், ஆயுள்வேத வைத்தியத்துக்கு வேறுஒருவிதமான தேசிய நலனுமாகத் தரப்படுத்தலா செய்ய முனைகின்றர்கள். கொழும்பு அரச ஆயுள்வேதக்கல்லூரியில் ஒரு தரமான பட்டமும், ஹம்பகா சித்தஆயுள்வேதக் கல்லூரியில் வேறு தரமான பட்டமும் கொடுக்கப்படும்இவ்வேளையில், ஆயுளவேத வைத்தியத்தின் அபிவிருத்தி இருகூருகப்பிரியவில்லை. தேசியநலனும் பாதிக்கப்படவில்லை. ஆனல் நண்பர் தமது அறிக்கையால் ஒன்றுபட்டிருக்கும் பட்டதாரிகளை தரத்தில் வேறுபாடுகளைக் காட்டுவதன்மூலம் இரு கூருகப் பிரிக்க முனைகிறர் போலும்!

5. நண்பர் தமது அறிக்கையில் ரூடி டி. சில்வா கமிஷன்பற்றியும் பிரஸ்தாபித்துள்ளார். அக்கமிஷன் நியமிக்கப்பட்டதன பிரதான நோக்கம் 'யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுள்வேதக்கல்லூரியைநிறுவுவது எவ்வாறு?' என ஆராய்வதேயாகும். யாழ் லங்கா ஆயுள்வேதக் கல்லூரியைப் பற்றி அல்ல ஒன்பதையும் இதற்கு முன்பு கல்லூரி சம்பந்தமாக எத்தனை விசாரணைக் கமிஷன்கள் விஜயம் செய்தன? அவற்றல் என்ன பயனைக் கல்லூரி அடைந்தது போன்றவிடயங்கள் நண்பருக்குத் தெரியாது போலும்!

எது எவ்வாறு இருப்பினும் மேற்குறிப்பிட்ட பிரச்னைகளுக்கு டி. ஏ. எம். எஸ். பட்டதாரிகள் சங்கம் உரிய விளக்கத்தை அளிக்காத பட்சத்தில் இவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை முற்றிலும் அர்த்தமற்றது என்றும், மாணவர்களின் ஏகோபித்த இப்போராட்டத்தை திசை திருப்பும் நோக்கத்துடன் வெளியிட்டதாகக் கருத நேரிடும்.

அ. கெங்காதரன்,
டி. ஏ. எம். எஸ்.
நிர்வாக அதிகாரி,
யாழ். சித்த ஆயுள்வேதக் கல்லூரி.

---

### எமக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாமே நியமனங்களாகவே இருக்கும் ஒரு கட்சியை நடத்தும் இவர், ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது வேடிக்கை தான்.

''பெரும்பான்மையான பொதுக் குழு உறுப்பினர்கள் என் தலைமை தேவையில்லை என்று என்றைக்கு அறிவிக்கிறர்களோ அன்றைக்கே, அதற்குக் கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருக்கிறேன். அதுதானே ஜனநாயக மரபு.

''நடிகர் ராமச்சந்திரனின் கட்சிக்கு நமக்கு வந்ததைப் போல சோதனைகளில் ஒரு துளி அளவு வந்தாலும் இந்த நேரம் அந்தத் தலைமை கண்டி, கதிர்காமம் என்று ஓடிப்போயிருக்கும்.''

(ஆ)

# 'ஆன்மவிடுதலையை நோக்கி இலக்கியங்கள் அமையவேண்டும்'

மட்டுவில், வெள்ளி

'மனிதனின் ஆத்ம விடுதலைக்காக மதங்கள் எவ்வளவு தூரம் சேவை செய்கின்றனவோ, அதேபோன்று, மனிதன் தன்வாழ்க்கையின் ஒவ்வொரு பிடிப்பிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும். இதற்கு இலக்கிய கர்த்தாக்களின் புதிய புதிய படைப்புகள் ஒவ்வோர் துறையிலும் ஒவ்வோர் மைல் கல்லாக அமையவேண்டும்'

இவ்வாறு நாவல் ஆசிரியர் திரு. கே. ஆர். டேவிட்டிற்கு அளித்த பாராட்டுவிழாவில் வணபிதா எஸ். ஜெபநேசன் அடிகள் பேசுகையில் கூறினார்.

இந்தப் பாராட்டுவிழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில், திரு. ஏ. வி. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில், 'கலைஞர்கள் தமது கலைத் திறனை சமுதாய வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவேண்டும். இன, மொழி, மத, கலை, கலாச்சார விடுதலைக்காக, கலைஞர்கள் சிறந்த உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட நல்ல சிறுகதை, நாடகப் படைப்புக்களை படைக்கவேண்டும். நாட்டினது உயர்வும் தாழ்வும், கலைமன்றங்களினதும் கலைஞர்களினதும் கையிலேதான் தங்கியுள்ளது' என்றார்.

தொடர்ந்து ஆசிரியர் திரு. பி. சுப்பிரமணியம், வித்துவான் சைவமணி மு. சபாரத்தினம், இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலு, ஆசிரியர் திரு. என். சிதம்பரநாதன் உட்படப் பலர் பேசினர்.

ஆயுர்வேத டாக்டர் திரு. பி. பிலிப்ஸ் நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

## நெஞ்சில் நிறைந்தவர்

மனிதர் பிறப்பதும் இறப்பதும் இயல்பு. அவனது வாழ்க்கை எப்படி அமைந்தது? அவன் தனக்கு மட்டுமாக வாழ்ந்தானா அல்லது சமுதாயத்திற்காக வாழ்ந்தானா? என்பதுதான் கேள்வி.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பது உயர்ந்த நெறி. அப்படி வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்பது வள்ளுவர் வாக்கு. இந்த வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து அமரரானார், மாவிட்டபுரம் பழையைச் சேர்ந்த திரு. ஆ. திருஞானசம்பந்தர்.

திரு. சம்பந்தரின் பெயர், தொழில் உலகில் நன்கு பிரபலமானது. சிறந்த தொழிலதிபராய் வாழ்ந்துகொண்டு அவர் ஈட்டிய வருவாய், தெய்வப் பணிகளுக்கு மட்டுமல்ல; சமுதாயப் பணிகளுக்குமே செலவிடப்பட்டன என்பதனைப் பலரும் அறிவர். தாம் பிறந்த கிராமத்திற்கென அவர் செய்த தொண்டுகள் அளப்பில. அவருடைய பணிகள் விளம்பரமற்றவை.

திரு. சம்பந்தரின் பெருமையைக் காலமெல்லாம் கூறப்போகின்ற மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் நிருத்த மண்டபமும், தலைசிட்டி வைரவர் கோவிலும் பூர்த்திசெய்யப்படாத நிலையில் அவர் நம்மை விட்டுப் பிரிந்தது நமது தவக் குறைவே. எனினும் அப்பணிகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையும் எமக்கு ஆறுதலாக உள்ளது.

மாவை ஆலய நிருத்த மண்டபம் பூர்த்தியானதன் பின்னரே அதன் சிறப்பினைப் பலரும் உணர்வர். சொற்களுக்கு விளக்கம் தருகின்ற கற்கோவிலாக அது அமைந்துவருகிறது. முற்றுப்பெறும் நிலையிலிருக்கும் தலைசிட்டி வைரவர் கோவில் வேலைகள் திரு. சம்பந்தரின் வாழ்க்கையில் மகத்தான சாதனை. வைரவர் கோவில் இலங்கையில் மட்டுமல்ல; இந்தியாவிலும் இல்லை என்ற வகையில் தலைசிட்டி வைரவர் ஆலயம் அமைந்து வருகிறது. ராஜகோபுரத்துடன கூடிய இக்கோவில் கும்பாபிஷேகத்தின் பின்னர் பழைக் கிராமம் பெறப்போகின்ற பெருமையைச் சொல்லவும் முடியாது.

இதனைவிட, அவர் உதவிய தெய்வீகப் பணிகளுக்கான உதவிகளும் அதிகமானவை.

அவர் சமுதாயப் பணியில் உதவினாரென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது வீமன்காமம் மகாவித்தியாலயம். வித்தியாலயத்திற்கு அவர் செய்துள்ள தொண்டுகள் பல. மேலும் பல முன்மாதிரியான உதவிகளைச் செய்யவும் அவர் திட்டமிட்டிருந்தார். அந்த நினைவுகளும் நிறைவேறும் என்று நம்புவோம்.

சமய நம்பிக்கையும், விளக்கமும் அவர் வாழ்க்கையின் மேம்பாட்டுக்கு உதவின. எளிமை, அன்பு அவரின் சிறப்புக் குணாதிசயங்களாக விளங்கின. காலம் அறிந்து தேவை உணர்ந்து அவர் செய்த உதவிகளினால் நன்மை பெற்றோர் பலர்.

அவர் இன்று நம்மிடம் இல்லாதிருப்பினும் அவருடைய நினைவு காலந்தோறும் நிலைத்துநிற்கும். இறை இன்ப நிழலில் அவர் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போம்.

ச. கந்தசாமி
மாவிட்டபுரம்.

## சைவத் தொண்டர் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், சனி

இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவிருந்த சைவத் தொண்டர் பயிற்சி முகாம் இந்திய அறிஞர்களின் வருகைக்காகப் பின்போடப்பட்டிருக்கின்றது. [அ]

## நியமனம்

நெல்லியடி, வெள்ளி

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற முதலியார் திரு. தி. அமிர்தலிங்கம், செல்வி எஸ். ராஜு ஆகிய இருவரும் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்களாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டதையடுத்து, பருத்தித்துறை நீதவான் திரு. அ. கங்காதரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வடபகுதியில் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண்மணி செல்வி எஸ். ராஜு ஆவார். (அ)

......

## பாலர்வாழ்வு மேம்பட...

சாவகச்சேரி, வியா.

''ஆறுவயது முடிந்தபின் பாடசாலைக்குச் செல்லவேண்டிய இப்பாலகர்களின் உண்மை மாசுபடியாமே நல்ல பண்புகளைப் பயிலவும் அவர்களின் இயல்புகள் வளரவும் இத்தகைய சிறுவர் பாடசாலைகள் சிறுவர்க்கு பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றன''

சாவகச்சேரி கிறிஸ்த திருச்சபையின் ஆதரவில் நடைபெறும் பாலர் பாடசாலை முதலாம் தவணை பூர்த்தியை ஒட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக சமுகமளித்து பேசும் போது சவகச்சேரி திருச்சபை போதகர் வண கே. எஸ். ஜெயசிங்கம் இவ்வாறு கூறினார். பாடசாலை அதிபர் திருமதி ராணிதேவா தலைமையில் இவ்விழா நடைபெற்றது. [உ]

• • •

## உடுப்புகள் உதவி

யாழ்ப்பாணம், சனி

கைதடி இலங்கைச் சைவ அநாதை இல்லத்தில் வாழும் 32பிள்ளைகளுக்கும் புதுவருடத் தினத்தன்று அரஸ்கோ அதிபர் திரு. இ. அரசரத்தினம் உடுப்புக்கள் வழங்கினார். [அ]

• • •

## மட்டக்களப்பில் யோகாசனப் பயிற்சி

யாழ்ப்பாணம், சனி

மட்டக்களப்புஇராமகிருஷ்ண மிஷனில் ஏழு நாட்கள் தங்கியிருந்து யோகாசனம், கூட்டு வழிபாடு போன்றவற்றில் பயிற்சிபெற இலங்கைச் சைவ அநாதை இல்ல மாணவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். [அ]

## "எடுத்த" தளபாடங்களை திருப்பித்தருக'

மட்டுவில், வெள்ளி

'இது ஒரு மகளிர் மகாவித்தியாலயமாக இருந்தும்கூட, இங்குள்ள மனையியல் பாட வகுப்பிற்கான தளபாடங்களை அரசாங்கம் திருப்பி எடுத்துக்கொண்டது, வருத்தத்திற்குரியது. இதேவேளையில் அரசாங்கம் இத்தளபாடங்களைத் திருப்பித்தரவேண்டும். தவறினால் புதிய தளபாடங்களைத்தர வேண்டும்'

இவ்வாறு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை அமைப்பாளர் திருமதி மகேஸ்வரி சிவஞானம் பேசுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி பி. சிவசங்கரம் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பதில்நீதவான் திரு. எஸ். கே. திரவியநாயகம், பிரபல தொழில்அதிபர் இ. பஞ்சாட்சரம்உட்படப் பலர் கலந்துகொண்டனர். திருமதி சிவஞானம் தொடர்ந்து பேசுகையில் தென்மராட்சிப் பகுதியிலேயே இது முக்கியமான ஒரு பெண்கள் மகாவித்தியாலயம். பெண்கள் மகாவித்தியாலயத்தில் மனையியல் பாடம் மிகஅவசியம். அப்படியிருந்தும், அரசாங்கம் இத்தளபாடங்களைத் திருப்பி எடுத்துவிட்டது என்றார்.

திரு. நவரத்தினம் எம். பி. பேசுகையில், 'இங்கு எச். என். சி. ஈ. வகுப்பை நடத்த அரசு அனுமதி கொடுத்துள்ளது. அதேநேரத்தில் அந்த வகுப்பிற்குத்தகுதியான ஆசிரியர்கள் பற்றாக்குறைஉள்ளது. இதுபற்றி கல்வித்திணைக்களத்துடன் தொடர்புகொள்வோம்' என்றார். திரு. ரி. நவரத்தினராஜா, திரு. இ. பஞ்சாட்சரம் உட்படப் பலர் பேசினர். (அ)

## காரைநகர் மணிவாசகர்சபை

காரைநகர், சனி

காரைநகர் மணிவாசகர் சபையின் 37-வது வருடாந்தக்கூட்டம்இன்றுசனிக்கிழமை பிற்பகல் காரைநகர் சிவன் கோவில் வசந்தமண்டபத்தில் திரு. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

வட இலங்கை

## ஹோமியோபதி சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 18-வது வருடாந்தப் பொதுக்கூட்டமும் டாக்டர் சாமுவேல் ஹனிமான் பிறந்தநாள் விழாவும் யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் கொண்டாடப்பட்டது. தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி ஹானிமானின் படத்திற்கு மலர்மாலை அணிவித்து உரையாற்றினார். இதைத் தொடர்ந்து டாக்டர் தி. பரமசிவம், டாடர் கே. எம். துரைசிங்கம் டாக்டர் வேலுப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர். இதைத் தொடர்ந்து சங்கத்தால் நடாத்தப்பட்ட நேர்முக வகுப்புகளில் கலந்துகொண்ட அங்கத்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

பின்வரும் டாக்டர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: அ. கிருஷ்ணசாமி, உபதலைவர்: தி. பரமசிவம், காரியதரிசி: எம். வேலுப்பிள்ளை, உபகாரியதரிசி: எஸ். குகதாசன், பொருளாளர்: எஸ். சிவநேசன், நிர்வாக சபை அங்கத்தவர்கள்: எஸ். ஏ. சண்முகம், பி. மகாலிங்கம், கே. எம். துரைசிங்கம், கே. லக்ஷ்மணன், பி. இராமசந்திரன், செல்வி நி. விஜெசித்தப்பி, செல்வி P இந்திராணி, தில்லைச்சந்திரன, அரியரத்தினம். (அ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



RIO (Jaffna) Now Showing
TARZAN IN THE JUNGLE REBELLION
Tarzan's Battle a Madman's Lust for Power When Secret Burried for aThousand Years Turns The Jungle intoA Savage Battle Ground

REGAL (JAFFNA) Daily at 4-45,7-00&9-30p m. only
SIMON WARD in
All Creatures Great & Small
(Color)

From 18-4-77
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

ராணி [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - வைஜந்திமாலா
நம்பியார் - வசந்தி நடித்த
தேன் நிலவு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஃ சிவாஜி (இருவேடம்)
ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் இப்பொழுது நடைபெறுகிறது!
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
M. G. ராமச்சந்திரன, பானுமதி
நடித்த
மதுரைவீரன்
(புத்தம் புதிய கொப்பி)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி,கே. ஆர்.விஜயா
[யாழ். நகர்] பத்மினி நடித்த
தினசரி 10-30,2-30,6-30,9-45.
இருமலர்கள்
(புதியபிரதி)

11-வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராஜா (யாழ். நகர்)
ஜெமினி - சரோஜாதேவி
நாகேஷ்—விஜய நிர்மலா
டி. கே. பகவதி
தினசரி 4 காட்சிகள் நடித்த
பணமா பாசமா
(புத்தம் புதிய பிரதி)

# "செயற் திட்டப்பாடம் மிக முக்கியமானது"

சாவகச்சேரி, வெள்ளி

'செயற்திட்டம் எனும் பாடம் தேசிய தராதரப்பத்திர வகுப்புக்கு மிகவும் முக்கிய மானபாடமாகும். இப்பாடத்தில் மாணவர் ஐம்பது வீதம் புள்ளிகள் பெற்றால் சர்வ கலா சாலை படிப்பு முதலாக எந்த மேற்படிப்புக்கும் போகமுடியும் இத்திட்டம் கல்விஅமைச்சராலும் நெடுஞ்சாலை அமைச்சராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகோன்னத திட்டமாகும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களால் நிறைவேற்றப்படவிருக்கும் புதியதோர் செயற்திட்டம்பற்றிய கருத்தரங்கொன்றில் கல்லூரி அதிபர் திரு. க.பாலச்சந்திரன தலைமைவகித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து மேற்குப்பக்கமாக அமிர்தாம்பிகை வித்தியாலயம்வரையும் செல்லும் கண்டி வீதியின் வளைவை சீராக்கியமைப்பதே இச்செயற்திட்டத்தின் பிரதான நோக்கமென ஆராயப்பட்டது.

திரு. பாலச்சந்திரன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: 'தேசத்துக்கு சேவைசெய்யும் மனப்பான்மை வேண்டும். அதை வளம்படுத்தவே இத்திட்டம் கையாளப்படுகின்றது. பிற்கால வாழ்வுக்கு ஆயத்தம்செய்யவும் சூழலுக்குதவி மற்றவர்களுக்குச் சேவையாற்றி பரோபகார சிந்தனையுடையவர்களாக கிருர்கள் வாழவும் வழிவகுத்துவைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வீதி வளைவாக அமைந்திருப்பதால் காலத்துக் குக்காலம் இப்பகுதியில் கோர விபத்துக்கள் நடைபெறுவதை நாம் கவனித்துள்ளோம். இவ்விபத்துக்கள் இவ்வீதியில் மேலும் மேலும் நடைபெற்று பிற்காலச்சந்ததியினர்க்கு இன்னல் விளைக்காமல் நாம் இப்போதே செயற்பட்டு இத்திட்டத்தால் இதைச் சீர்ப்படுத்த வேண்டும். கல்விஅமைச்சர், நெடுஞ்சாலை அமைச்சர் ஆகியோரால் கைகொடுத்து உதவப்பட்டதிட்டம் இதைச் செயற்படுத்த குறித்த வீதியிற் குடியிருப்போர் உதவிசெய்து இத்திட்டம் நிறைவேறச் செய்யவேண்டும்.

இச்செயற் திட்டத்திற்கு போதிய ஆதரவு வழங்கவேண்டும் என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி.என்.நவரத்தினம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர், நகர சபை செயலாளர் ஆகியோர் பொதுமக்களை கேட்டுள்ளனர்.

டிறிபேக் கல்லூரி செயற்திட்ட பாட ஆசிரியர் திரு. எம். நாகேந்திரராசா, மாணவர் செயற்திட்ட தலைவர் திரு. மனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (க)

# 'தமிழ்ஈழ'...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி ஏற்றுக்கொள்ளுமாஎன்பதைத் தான் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதாகும்,

## இணைவதில் தவறில்லை

"இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டனில் அட்லி பிரபுவும், வின்சன்ட் சேர்ச்சிலும் ஒன்றுபட்டுப் போராடினர். ரஷ்யாவில் ஸ்டாலினும் அமெரிக்காவில் ரூஸ்வெல்டும், பிரிட்டனில் சேர்ச்சிலும் ஒன்றுபட்டு பாசிசத்தை எதிர்த்து வென்றனர். சீனவில் கோமின்டாங்கும், மாசேதுங்கும் ஒன்றுபட்டுப் புரட்சி நடத்தினர். ஆகவே அதுபோல் தமிழ் ஈழ விடுதலைக்காகத் தமிழர் கூட்டணி, திரு. வி. பொன்னம்பலத்துடனே அவரது பொதுவுடைமைக் கட்சியுடனே இணைந்து போராடுவதில் தவறில்லை.

"இளைஞர்கள் நமது இலட்சியத்தில் நம்பிக்கை வைத்து, அதற்காகத் தியாகஞ்செய்வதோடு இயக்கத்தையும் வழி நடத்திச் செல்லவேண்டும். இயக்கத்தையும், இலட்சியத்தையும் அதன் தலைமையையும் காலந்தான் தீர்மானிக்கும். நாம் ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்பாக இருக்கவேண்டும். இளைஞர்களின் சந்தேகங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவுவனவாக இருக்கவேண்டும்."

மற்றும் பலரும் பேசினர்.

# தவறணையில் அடிதடி: ஒருவர்காயம்

வேலணை, வெள்ளி

இரகசியக் காதல் விவகாரம் கள்ளுக்கொட்டில்வரைசென்று அடிதடியில் முடிந்தது.

இச்சம்பவம் சுருவில் பகுதியைச்சேர்ந்த கெட்டில் என்ற இடத்தில் இடம் பெற்றது.

புத்தாண்டு தினமான 13-ம் திகதி சுருவிலில் உள்ள கள்ளுத் தவறணையில் கள்ளுஅருந்திக் கொண்டிருந்தவர்களுக்கிடையேஏற்பட்ட தர்க்கத்தின் போது காதல் சம்பவம் அம்பலமானது. இததகராறையடுத்து ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயங்களுடன் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வருகின்றார்.

காயத்துக்குள்ளானவர் வே. சுந்தரம்பிள்ளை என்பவராவார்.

# சாவகச்சேரியில்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.அன்ரன் அல்பிரெட் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி அன்ரன் அல்பிரட் பரிசில்களை வழங்குவார்.

தொடர்ந்து விசேஷ சொற்பொழிவுகளும் பிரதம விருத்தினரின்,உரையும், இசை நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
அன்பைத்தேடி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்—நிர்மலா
வீட்டுக்கு வந்த மருமகள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எஸ். எஸ். ஆர்
சரோஜாதேவி
தேடிவந்த செல்வம்

# "ஒருநாட்டின் வளர்ச்சி இளைஞர் கையில்தான்"

—உடுப்பிட்டி எம்.பி

கரவெட்டி, வெள்ளி

'ஒரு கிராமத்தின் வளர்ச்சி—ஒருநாட்டின் வளர்ச்சி - ஒரு இனத்தின் வளர்ச்சி இளைஞர்களின் கையில்தான் தங்கியுள்ளது. இளைஞர்கள் ஒற்றுமையுடன் செயல்பட்டால்தான் முன்னேற்றமான காரியங்களில் செயல்படமுடியும்'

கரவெட்டி மேற்கு ஸ்ரீமுருகன் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சிங்கள-தமிழ் புத்தாண்டையொட்டி நடாத்திய விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உடுப்பிட்டி எம். பி. திரு. க.ஜெயக்கொடி பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'கிராமப் பகுதி மக்கள்தான் எமது தமிழ் பாரம்பரியங்களை—கலை—கலாச்சாரங்களைக் காப்பாற்றிவருகின்றனர். இன்றும் அவர்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையில் இவற்றை அனுசரித்துவருவதைக் காணும் பொழுது எமது உள்ளம் பூரிக்கின்றது. தெய்வவழிபாடு, சைவ அனுஷ்டானமுறைகளிலும் அவர்கள் முறைப்படி ஒழுகுகின்றனர்'

கி. மு. சங்கத் தலைவர் திரு. வ தண்டாயுதம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு.ஏ.வி. மாணிக்கம் உட்பட பலர் உரையாற்றினர்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு, திரு. ஜெயக்கொடி எம். பீ. பரிசில்கள் வழங்கினர்.

# புத்தாண்டில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கொன்றிருக்கிறார். பகைமையே இதற்குக் காரணமாம்.

குளியாப்பிட்டியாவில் புதுவருடத்துக்கு முதல்நாள் அப்புகாமி பண்டாரமாத்தயா என்பவர் தாக்கிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். எஸ்.பி. ஜயவர்த்தன உட்பட மூவரைப் பொலிசார் தேடுகின்றனர்.

மல்தெனியா என்னுமிடத்தில் புதுவருட தினத்தன்று எம். ரி. சுமதிபாலா கொலை செய்யப்பட்ட சம்பவம்தொடர்பாக சிறிசேன உட்பட இருவர் தேடப்படுகின்றனர். (ஆ)

# "விளையாட்டுத்துறையில் ஈடுபட மாணவருக்கு நேரமில்லையே"

நெல்லியடி, வெள்ளி

ாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு துறையிலும் கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டுதுறையின் அவசியத்தை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்கி கூறி மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். "என்று பருத்தித்துறைக் கல்வி வட்டாரப்பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.வேலும் மயிலும் கூறினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில், வட்டாரக்கல்வி அதிகாரி திரு. என்.துரைசாமி தலைமையில் நடைபெற்ற இந்போட்டியின் போது டாக்டர் வேலும்மயிலும் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்று மாணவர்கள் விளையாட்டுத்துறையில் போதிய அக்கறை செலுத்தவில்லை ஏனெனில் பாடசாலையில் படிப்புமுடிந்தும், விளையாட வேண்டிய மாலைநேரத்தில் 'ரியூசனுக்காகச் சென்று விடுகிறார்கள். ரியூசனால் மாலையில் விடுதிரும்பியதும் விளையாடுவதற்கு நேரம் இல்லாதிருக்கிறது.கல்வி நிலைமை சீரற்றிருக்கின்றமையினால் தான் இந்நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமையைப் போக்க ஆசிரிய தொழிற்சங்கங்கள் முன்வரவேண்டும் என்றார். 40க்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்துகொண்ட இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு டாக்டர் திருமதி வசந்தா வேலும்மயிலும் பரிசில்கள் வழங்கினர். இப்போட்டி ஆண்கள் பிரிவில் ஹட்லிக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் மெதடிஸ்தமகளிர் கல்லூரியும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன. (அ)

ஈழநாடு
The EELANADU

# மேற்கு ஜெர்மன் பெண் பலாலியில் கைது

மாவிட்டபுரம், வெள்ளி

இலங்கைக்குள் வரத் தடையிருந்தும் தமது சாதுரியத்தால் இங்கு பல தடவை வந்து திரும்பியதாகக் கருதப்படும் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் இந்தத் தடவை இலங்கைக்குள் வர முயற்சித்தபோது பலாலி விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கலாச்சார ஆராய்ச்சியின் நிமித்தம் இலங்கை வந்த மேற்கு ஜெர்மனைச் சேர்ந்த 24 வயதுடைய லசின்குஷ் ஊர்சுலா என்னும் இளம் பெண் பின்னர் நாடு திரும்பி மேலும் பல தடவைகள் இலங்கைக்கு வந்து நடமாடியதை அடுத்து அவர் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் அவருக்கு இலங்கைக்குள் வரத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருந்தபோதும் எப்படியோ இலங்கைக்குள் நுழைந்துவிட்ட இப்பெண்மணி இங்கிருந்து தலைமன்னார் வழியாகத் திருச்சி சென்று பின்னர் திருச்சியிலிருந்து விமான மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தபோது அங்கு கடமையிலிருந்த காங்கேசன்துறைப் பொலிசார் அவரைக்கைது செய்தனர்.

இவ்விளம் பெண் கலாச்சார ஆராய்ச்சியின் நிமித்தம் இங்கு வந்து சில காலம் வித்தியாலங்கார வளாகத்தில் புத்தமதம் படித்ததாகவும், நுகேகொடையில் இவருக்குச் சிநேகிதர்கள் உண்டென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் இப்பெண் குறித்து காங்கேசன்துறைப் பொலிசார் தீவிர விசாரணையிலீடுபட்டுள்ளதுடன் கொழும்பு பொலிஸ் மேலிடத்துக்கும் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை பஸ்டிப்போ தினம் 7000ரூபா இழக்கிறது!

### பஸ்கள் பழுது காரணம்

நெல்லியடி, வெள்ளி

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ்சேவை மிகமோசமடைந்துள்ளமையால் இப்பிரதான பாதையின் தரிப்பிடங்களிலும் யாழ். பருத்தித்துறை பஸ் நிலையங்களிலும் பிரயாணிகள் மணிக்கணக்கில் காத்து நிற்கவேண்டியுள்ளது.

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ, பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய இருபாதைகளுக்கூடாக தினமும் அறுபதுக்கு மேற்பட்ட பஸ்சேவைகளை நடத்துவதாக யாழ். பருத்தித்துறை பஸ் நிலையங்களில் விளம்பரப்படுத்தியுள்ளது.

ஆனால் இவ்விரு பாதைகளுக்கு ஊடாகக் கடுகதி பஸ் சேவைகளைத் தவிர சாதாரண பஸ் சேவைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இதனால் இவ்விருபாதைகளுக்கூடாக மணித்தியாலத்திற்கு ஒரு தடவை நடைபெறும் கடுகதி பஸ் வண்டிகளில் பிரயாணிகளின் தொகை அதிகரித்துள்ளதுடன் மிதிபலகைகளில் கூட தொங்கிக் கொண்டு தமது பிரயாணத்தைப் பிரயாணிகள் மேற்கொண்டு வருவதை அன்றாடம் காணலாம். இரவு ஏழேகால் மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஆகிய பஸ் நிலையங்களிலிருந்து பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பஸ்சேவைகள் நடைபெறுது. இரவு பத்து மணிக்கு மட்டுமே இரண்டு பாதைகளிலும் ஒவ்வோர் பஸ்வண்டிகள் மட்டும் சேவையிலீடு படுத்தப்படுகின்றன. இதனால் பல பிரயாணிகளுக்கு பஸ்வண்டியில் இடம் கிடைக்காமல் ஏமாற்றமடைய வேண்டியுள்ளது.

இதுமட்டுமன்றி இந்த டிப்போவில் குடாநாட்டுக்குள் நடத்தப்பட்டு வரும் இதர பஸ் சேவைகளும் மிகமோசமடைந்துள்ளன. சுமார் 25 பஸ் வண்டிகள் பழுதடைந்து உதிரிப்பாகங்களின்றி இந்த டிப்போவில் முடங்கிக் கிடப்பதனால் தினமும் சுமார் ஏழாயிரம் ரூபாய் வருமானத்தை இந்த டிப்போ இழந்து வருகிறது. [அ]

## பாடசாலைகளில் சோஷலிஸ பாட போதனை

கொழும்பு, வெள்ளி

வருகிற மாதத்திலிருந்து நாடுபூராவுமுள்ள பாடசாலைகளில் சோஷலிசம் கற்பிக்கப்படவுள்ளது. கல்வி அமைச்சு இத்தகவலை இன்று அறிவித்தது. (ஆ)

## இ. போ. ச.—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்சுப்பிரின்டன் திரு. அபயகுணவர்த்தன தலைமையில் ஒரு குழுவொன்று நியமிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த இ. போ. ச. ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்.

பஸ் சாரதியைத் தாக்கியதாகக் கூறப்படும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று இ. போ. ச. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம—ஆ)

## மரண அறிவித்தல்

### தியாகராசா சந்திரசேகரி

மானிப்பாய்.

சிறுப்பர் சுப்பையா குடித்தனத்துக்குச் சேர்ந்த தியாகராசா சந்திரசேகரி இளைப்பாறிய ரெயில்வே இன்ஸ்பெக்டர் காலஞ்சென்றுவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுப்பையா தியாகராசாவினதும் மிச்சல் செல்லையா சொர்ணம்பாளின் மூத்த புதல்வர். இவர் சௌந்தரநாயகியின் அன்புக் கணவரும் நைஜீரிய ஆசிரியை நந்தவதியினதும், இங்கிலாந்திலிருக்கும் எஞ்சினியர் ராஜா நவினச்சந்திரனதும் அன்புத்தந்தையுமாவார்: காலஞ்சென்ற சில்வஸ்ரார் கெங்கா குலரத்தினதும், கமலா லோகீஸ்வரனதும் பொன்னு முத்தாச்சி தியாகராசாவினதும் சகோதரனுமாவார். இவரின் பூதவுடல் சனிக்கிழமை 16-ந் திகதி 4-30 மணிக்கு மானிப்பாய் சிறுப்பர் வளவிலிருந்து பிப்பிலி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல் கொடுப்பவர்கள்:
திருமதி சந்திரசேகரி
திரு. நவீன சந்திரசேகரி (மகன்)
திருமதி நந்தா பஞ்சலிங்கம் (மகள்)
5932

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu] P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, [Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.]

## சஞ்சய் காந்தியின் மேற்கு வங்கச் செலவு யாருடையது?

### பிரச்னைக்குப் பதில்கூற யாருமில்லை

புதுடில்லி, ஏப். 15

மேற்கு வங்காளத்தில் சஞ்சய்காந்தி சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டபோது மத்திய அரசுக்கு ஏற்பட்ட செலவினங்கள் சம்பந்தமாக பிரச்னை கிளம்பியுள்ளது.

முன்னாள் உள்துறை மந்திரியிடம் இதுபற்றிக் கேட்டபோது தமக்கு இதுசம்பந்தமாக எதுவித தகவலும் தெரியாது என்று கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இந்திராவின் புதல்வர் சஞ்சய்காந்தி தேர்தலுக்குமுன்னர் மேற்குவங்காளத்தில் குறுவளிலோகத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்ததற்கு செலவிடப்பட்டதொகை யாருடையது என்று இப்போது கேட்கப்படுகின்றது.

அத்துடன் காங்கிரஸ் கட்சி பம்பாய் வங்கியொன்றில் பெருந்தொகையானபணத்தை தேர்தல் பிரசாரத்துக்காக எடுத்துள்ளதாம். இந்திய தேர்தலின்போது தேர்தல் பிரசாரத்துக்காகஇவ்வளவுதொகைப் பணத்தை காங்கிரஸ் மட்டுமே எடுத்துள்ளதாம். (ஆ)

## இன்று காங்கிரஸ் வா. மு. கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி கமிட்டி கூட்டம், யாழ்ப்பாணத்தில் இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

யாழ். நாவலர் வீதியிலுள்ள காங்கிரஸ் நிர்வாக செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை இல்லத்தில் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் தலைமையில் இக் கூட்டம் நடைபெறும். (க)

## பேரிழப்பு

அனுராதபுரத்தில் வழக்கறிஞராகக் கடமையாற்றியவரும், அனுராதபுரம் நகரசபைத் தலைவராக 13 ஆண்டு காலம் சேவையாற்றியவருமான சம்பந்தர் நடராசா காலமான செய்தி தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கை வாழ் மக்களெல்லோருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த சம்பந்தர் நடராசா ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தமது கல்வியை ஆரம்பித்தார், பின்பு இவர் கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் படித்தார்.

இவர் தந்தையார் சம்பந்தரும் அனுராதபுரத்தில் முடிக்குரிய வழக்கறிஞராக கடமையாற்றியவர்.

இவர் 1916-ம் ஆண்டு அனுராதபுரத்தில் வழக்கறிஞராக தொழிலை ஆரம்பித்தார்.

அனுராதபுரம் மாநகரசபையின் முதல்வராக இருந்தஇவர் 13 ஆண்டுகாலம் தொடர்ந்து தலைவராகப் பணியாற்றினார்: இவர்காலத்தில்தான் மாநகர மண்டபம் கட்டப்பட்டது.

மூன்றுசந்ததியாக அனுராதபுரத்தில் வழக்கறிஞராகத் தொழில்புரிந்துவரும் இவர்கள் குடும்பத்தில்இவரின்மகன் திரு. பத்மநாதன் இப்பொழுது வழக்கறிஞராக இருக்கிறார்.

கடந்த 14-ம் திகதி வியாழக்கிழமை காலமான திரு. எஸ். நடராசாவுக்கு இறக்கும்பொழுது வயது 83, இவரின் பூதவுடல் அனுராதபுரம் யாழ்ப்பாணம் சந்தியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பொது மக்களின் அஞ்சலிக்காக இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை மாநகரசபை மண்டபத்தில் வைக்கப்படும். பின்னர் அனுராதபுரத்தில் தகனம்செய்யப்படும்.

— மாணிக்கம்.

## நீர்வேலியில் கொலை! ஒருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய்பொலிஸ்பகுதியில் நீர்வேலியில் இடம்பெற்ற சச்சரவுஒன்றில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அருணாசலம், நமசிவாயம்என்பவரே கொலை செய்யப்பட்டவராவார். கந்தையா சிறிநிவாசன் என்பவரை இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் தேடுகின்றனர்.

புத்தாண்டு தினத்தன்று இச் சம்பவம் நடந்தது. கோப்பாய் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ஆ)

## நாளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ். சென். ஜேம்ஸ் சனசமூக நிலைய புதிய பாலர் பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழா, நாளை இரவு யாழ். லயன்ஸ் கிளப் தலைவர் திரு. சி. மனோகரனால் திறந்து வைக்கப்படவிருக்கிறது: விழாவில் சிவநெறிப் புரவலர் க. கனகராசாவுக்குப் பட்டமளித்து பாராட்டுப்பத்திரமும் வழங்கப்படும். விழாவிற்கு யாழ். எம். பி. திரு. சி. எக்ஸ் மார்ட்டினும் யாழ். ரோட்டறிச் சங்கத் தலைவர் திரு. இ. அரசரத்தினமும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். விழாக் கலை நிகழ்ச்சியில் சென். ஜேம்ஸ். சனசமூக நிலைய யாழ். வான்மதி கலாலயம் வழங்கும். "முடிந்த கதை தொடர்வதில்லை" நாடகமும், மெல்லிசை, நடனம் ஆகியனவும் இடம்பெறும். (அ)

## தி. மு. க.—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கப்பட்ட லோகசபையில் தி. மு. க. தலைவராக இருந்த திரு. செழியன் தி. மு. க. வின் ஆதார உறுப்பினர் பதவியிலிருந்தும் சகல பதவிகளிலிருந்தும் தாம் ராஜினாமாச்செய்வதாக கழக பொதுச்செயலாளர் டாக்டர் இரா. நெடுஞ்செழியனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த லோகசபைத் தேர்தலில் தி. மு. க. படுதோல்வி அடைந்தபின்னர் கழகத்தில் இருந்து ராஜினாமாச்செய்த முதல் பெரும் தலைவர் இவரேயாகும். (இ)

## மண்வெட்டி அலவாங்கு விலைகுறைந்தது

கொழும்பு, வெள்ளி

மண்வெட்டிகளின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கனரக கூட்டுத்தாபனம் தயாரிக்கும் மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

குறைக்கப்பட்ட மொத்த விற்பனை விலைவிபரம் வருமாறு:

22 ரூபா 10 சதமாக விற்ற மண்வெட்டி 16 ரூபா 60 சதமாகவும், 22 ரூபா 25 சதமாக விற்ற மண்வெட்டி 16 ரூபா 70 சதமாகவும் 32 ரூபா 50 சதமாக விற்பனைசெய்த யாழ்ப்பாணத்தில் பாவிக்கும் மண்வெட்டி 24 ரூபா 35 சதமாகவும் 30 ரூபா 52 சதமாக விற்ற பிக்கான் 22 ரூபா 90 சதமாகவும் 52 ரூபா 80 சதமாக விற்ற அலவாங்கு 39 ரூபா அறுபது சதமாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளன. (இ)

## ரூ. 35 ஆயிரம் வசூல்

மட்டுவில், வெள்ளி

கைதடி அகில இலங்கை சைவ அநாதை இல்லக் கொடி விற்பனை மூலம் மொத்தம் 35,000 ரூபா கிடைத்துள்ளதாக, இல்ல நற்பொறுப்பாளர் திரு. ஆ. கந்தையா தெரிவித்தார். (அ)

## செல்வாவை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருந்து தேவையான உதவிகளைச் செய்துவருகின்றார். கடந்த 24 நாட்களாக மூதறிஞர் செல்வா தொடர்ந்து மூர்ச்சித்தநிலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

பார்வையாளர்கள் தினமும் வந்து, பதிவுப்புத்தகத்தில் கையொப்பம் வைத்துச் செல்கின்றனர். (க—அ)